விலை ரூபா 1-00 ★

BETTER BUY
**UNIFO**
STEEL CABINETS
Manufacturers and Distributors
U. F. O.
INDUSTRIES LTD.
4430

ஈழநாடு
THE EELANADU

விசேட மலிவு விற்பனை!
அசலம் குறைக்கப்பட்ட
[மஸ்கன்ஸ்] அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள்
12' X 3' — 10' X 3'
8' X 3' — 6' X 3'
தொடர்புகள்:
ஆனந்தி அன் கோ;
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
[துர்க்காதேவி
ஆலயத்திற்கு அருகாமையில்]
4385

மலர் 24 ஆவணி 20 ஜுலகம் 16 இதழ் 204
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 5—9—82

## தனிநாடு நிறுவும் கூற்றுக்கு

# தமிழ் இனத்தின் தீர்ப்பைப் பெறவே தேர்தலில் போட்டி

### குமார் பொன்னம்பலம் அறிக்கை

(ஏ. வி மாணிக்கம்)

**"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கான சந்தர்ப்பமாகக் கொள்ளுகின்றது. இதில் "தமிழ் தேசிய இனம் தனது பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர தனிநாட்டை உடனடியாக நிறுவ விரும்புகின்றது என்ற கூற்றுக்குத் தமிழ் தேசிய இனத்திடமிருந்து தீர்ப்பொன்றை அ. இ. தமிழ்க் காங்கிரஸ் எதிர்பார்க்கின்றது."**

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்று முன்தினம் கட்டுப்பணம் செலுத்தியுள்ள அ. இ. தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந் நாட்டின் இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வை விரும்பாத எந்தச் சிங்கள அரசும் தமிழ்ப் பேசும் இனத்தின் அபிலாஷைகளை உலகுக்கு அறிவிக்க வழிவகுக்கும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு வழி செல்யும் என எதிர்பார்ப்பது மடமைத்தனமாகும். ஆகையால் இன்றும் என்றும் தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளை உலகுக்கு எடுத்துக் காட்டும் சந்தர்ப்பமாக இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பாவிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஜனாதிபதித் தேர்தல் முழு நாட்டின் அடிப்படையில் நடைபெற இருப்பதால்தான் தமிழ் காங்கிரஸ் தமிழ் தேசிய இனத்தை இத்தேர்தலை ஒரு ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் தேர்தலாகக் கருதாமல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக்கருதும்படி கோருகிறது. இதன் மூலம் இந்நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழும் தமிழ்ப் பேசும் மகனும் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெறக்கூடியதாக இருக்கும். இந்த சர்வஜன வாக்கெடுப்பு தமிழ் பேசும் மக்களுக்கு மாத்திரம் அமைவதாக இருக்கும் எனத் தமிழ் காங்கிரஸ் எதிர்பார்க்கும் அதேவேளையில் கணிசமாக சிங்கள மக்களும் இக் கூற்றுக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கிறது. "சுதந்திரத்தனிநாடு" என்னும் கூற்றை ஆதரிக்கும் எந்த ஒரு தமிழ் மகனையும் தமிழ் காங்கிரஸ் அபேட்சகருக்கு வாக்களிக்கும்படி தமிழ் காங்கிரஸ் கோருகிறது.

இத்தேர்தலை ஒரு தனி நபரைப் பதவிக்கு அமர்த்தும் தேர்தலாக அல்லாமல் இதை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதும்படி தமிழ் காங்கிரஸ் கோருகிறபடியால் இரண்டாம் மூன்றும் விருப்ப வாக்கு எந்த ஒரு அபேட்சகருக்கும் வழங்கவேண்டாமெனத் தமிழ் காங்கிரஸ் கோருகிறது.

தனிப்பட்ட ஆசனங்களுக்காக நடைபெறும் ஒருபொதுத் தேர்தலிலும் பார்க்க கூடிய கவனத்துடனும் கூரிய நோக்குடனும் ஒரு நாட்டின் ஜனாதிபதித்தேர்தலை உலகம் அவதானிக்கும் "தனி நாடு" என்ற கேள்விக்கு இறுதியாகவும் முழு உலகமும் அறியும்படியாகவும் தமிழ் இனம் பதில் அளிக்கவேண்டும். இந் நோக்கத்திற்காக இத்தேர்தலை முக்கியமான தொன்றாக கருதும்படி தமிழ் காங்கிரஸ் கோருகிறது. தமிழ் காங்கிரஸ் இந்த விடயத்தில் தன் கடமையைச் செய்துவிட்டது. தமிழ் இனம் தனது நிலைமையைச் சந்தேகமின்றி எடுத்துக் காட்டவேண்டும். 'தனிநாடு' என்ற கூற்றுக்கு ஆதரவாக வாக்களிப்பதா இல்லையா எனத் தெரிவிப்பது தமிழ் மக்களுடைய விருப்பம்.

இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒருசர்வஜன வாக்கெடுப்பாகத் தமிழ் காங்கிரஸ் கருதுவதால் பல விஷயங்களைப் பற்றிக் குழப்பத்தை உண்டு பண்ணுமல் இந்த ஒரே ஒரு கேள்வியை மாத்திரம் தமிழ்ப் பேசும் மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்க விரும்புகிறது. இந்த நாட்டை ஆளும் பதவிக்குவர ஆர்வம் கொண்டிருக்கும் மற்றைய அபேட்சகர் எவரும் தமிழ்இனத்தில்பிரச்னையில் தங்களுடைய நிலைமை என்ன என இற்றை வரைக்கும் கூறவில்லை. தனிச்சிங்களச்சட்டம் இந்நாட்டிலே சட்டமாக இருக்கும் வரையில்: சிறுபான்மை இனத்துக்கு சம சந்

[8-ம் பக்கம்பார்க்க]

### ஆனந்தராஜன் யாழ்.பொலிஸ் அதிபர்

(யாழ்ப்பாணம்]

திரு. ரி. இ. ஆனந்தராஜன் யாழ். பொலிஸ் அதிபராக நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார்

முக்கிய அலுவல் காரணமாக நேற்று திரு. ஆனந்தராஜன் கொழும்பு பயணமானார். (வெ)

### அமிர்தகிரி கொலை வழக்கு: இரு எதிரிகளும் விடுதலை

[கொழும்பு]

அமிர்தகிரி கொலைவழக்கின் இரண்டு எதிரிகளும் நேற்றுக் கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஐ.நா சபையின் நிபுணரான பி. சந்திரசேகராடயஸ் என்பவரைக் கொலைசெய்ததாக, அவரது மனைவி ரேஜினிடயஸ் மீதும், கார்ச்சாரதி பொன்சேகரா மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ் வழக்கில் எதிரிகள் குற்றவாளிகள் அல்லவென ஜூரிமார் ஏகமனதாகத் தீர்மானித்ததையடுத்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி றெபேர்ட் சில்வா எதிரிகளை விடுதலை செய்தார். (வெ)

### தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல்சேவை நிறுத்தம்

[கொழும்பு)

தலைமன்னார் — ராமேஸ்வரம் இலங்கை — இந்திய கப்பல் சேவை அடுத்தமாத நடுப்பகுதியிலிருந்து டிசம்பர் மாத இறுதிவரை நிறுத்தி வைக்கப்படவுள்ளது.

காலநிலைபாதகமாக இருப்பதினாலேயே இக்காலப்பகுதியில் இலங்கை — இந்திய கப்பல் சேவை நிறுத்திவைக்கப்படவுள்ளது.

இக்கப்பல் சேவை மீண்டும் அடுத்தவருடம் ஜனவரி 3-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (வெ)

### யாழ். மாவட்டத்தில் கொள்ளை, திருட்டுக்கள் தினசரி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கொள்ளை, வழிப்பறி, திருட்டுச்சம்பவங்கள் தினசரி அதிகரித்துவருகின்றன.

இது சம்பந்தமாக பீதியடைந்துள்ள மக்கள் யாழ். அரசாங்க அதிபரிடமும், பொலிஸ் உயரதிகாரிகளிடமும் முறையிட்டுள்ளனர்.

நகரப்பகுதிகளைவிட கிராமப்புறங்களிலேயே இக்குற்றச் சம்பவங்கள் மலிந்துள்ளதாக உயரதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து தெரியவருகிறது (மா]

### "நாட்டின் அபிவிருத்திக்கு அமைதி,சமாதானம்தேவை" ஜனாதிபதி கூறுகிறார்

[அநுராதபுரம்]

"நாட்டில் அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும். பல்வேறு பிரிவினராகப் பிளவுபட்டுள்ள மக்களிடையே சகோதரத்துவ உணர்வும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் உணர்வும் இருப்பது அவசியம்"

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று அநுராதபுரத்தில் சுவர்ணபூமி இயக்கத்தின் கீழ் காணிவழங்கும் வைபவத்தின் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:

"பொதுமக்கள் உணவுற்பத்தியில் தன்னிறைவுகாண வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் காணி, காணி அபிவிருத்தியமைச்சர் திரு. காமினி திசநாயக்கா, வர்த்தக கப்பல்துறையமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி உட்பட பலர் உரையாற்றினர். (வெ)

**காணி விற்பனைக்கு**
அரிசி ஆலை அல்லது தொழிற்சாலை அமைப்பதற்குச் சகல வசதியுடன் 12 பரப்பு தாவடியிலிருக்கிறது.
தொடர்பு- அன்னவாச ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 608. [4434]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள லான் மாஸ்ட்டர் கலப்பை, பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; முனீஸ்வரன் மோட்டர் வேக்ஸ் (லேடன் பெனியன் தொழிற்சாலைக்கு அருகாமையில்) ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 4399

8 சிறி 2000 மொறிஸ் ஒக்ஸ்போட் (U. K. Original) கார் காட்சி அறை நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கந்தையா மாஸ்டர் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில். 4370

புதிய SISIL குளிர்சாதனப் பெட்டி ஒன்று விற்பனைக்குண்டு. 383/2, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4416

சாவகச்சேரி சிவன் கோவிலடியில் வீட்டுடன் 3 பரப்புக் காணியும், கிணற்றுடன் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. [சந்தை, பஸ், புகையிரத நிலையம் அண்மையில்] சு.நல்லம்மா,சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 4379

''பத்துப் பரப்பு – ஆனைக்கோட்டைக் காணி பஸ் செல்லும் றோட்டிற்கருகில், விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர், ''திருவடி நிழல்'', அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணேசன், அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.'' 439'

நல்ல நிலையிலுள்ள 11 சிறி 8000 தொடர் Datsun Sunny B 211 Centre "S"உம் புதிய சன்யோ "B" MAX வீடியோ டெக்கும் உடன் விற்பனைக்குண்டு. N. ரூபன், தேவாலய வீதி, சங்கானை. 4415

சாவகச்சேரி புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் $1\frac{1}{2}$ பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளும் விலாசம் 146/4, சிறீ. இராமநாதன் றோட், கொட்டாஞ்சேனை,கொழும்பு-13. 4420

சாவகச்சேரி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் நகரசபை எல்லைக்குள் கல்லடி ஒழுங்கையில் பா, பலா, தென்னை மரங்களுடன் இரு காணித்துண்டுகள் தலா $6\frac{1}{2}$ பரப்பு, 5 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி த. சிவசம்பு மே/பா ச. பாலசிங்கம், 84, யாழ் வீதி, நுணுவில் – கிழக்கு, சாவகச்சேரி. 4428

## விற்பனைக்கு

கொக்குவில் மருத்துவ பீடத்திற்கு முன் கோணமலை வைரவர்கோவில் முன்றோட் ஓரத்தில் 100 யார் தூரத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. தரகர்கள் தேவையில்லை. திருநெல்வேலிச் சந்தி 'வெஸ்கோ' கோப்பிபாரில் தொடர்புகொள்ளவும். 4433

சொந்தப் பாவிப்பிலுள்ள EY 4250 சோமசெற் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. சுப்பிரமணியம், (சட்டத்தரணி) 6/2, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4439

60,000 மைல் ஓடிய, டாக்டரால் பராமரிக்கப்பட்ட 504 கார் விற்பனைக்குண்டு. A. கனகரத்தினம், 195, பிரதான வீதி, சுளிபுரம் சந்தி, சுளிபுரம். 4421

யாழ் நகருக்குள் அரியாலை சந்தைக்கும் கண்டி றோட்டிற்கும் 100 யார் தொலைவில் உள்ள வீடு கட்டுவதற்கு வசதியான $1\frac{1}{2}$ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்— திருமதி. பொ. நல்லம்மா, 44, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 4431

National NV-300 EN வீடியோடெக் விற்பனைக்குண்டு. க. தம்பிமுத்து, 268/5, நாவலர் றோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4437

நுணுவில் மேற்கு – கண்டி றோட்டுக்கு மிக அருகாமையில் வீடுகட்டுவதற்கேற்ற 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. சேச்பாடசாலை அருகில் உண்டு. ஆகக்கூடியவிலை எதிர்பார்க்கப்படும். தொடர்பு: ஞானவாசம், பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி. 4441

ஹொண்டா C 90, 84 ஸ்ரீ தொடர் இலக்க மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருச்செல்வம், 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம், தொ. பே. 561. 4442

## தவறிவிட்டது

கடந்த 30-8-82 தலைமன்னாரிலிருந்து வரும் வழியில் முளங்காவில் பரந்தன் வீதியில் உடுப்புகள் அடங்கிய சமக்காளப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் ரூ 3000/- வழங்கப்படும். நா. இராசையா, கந்தசாமி கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. 4422

## தேவை

புதிய அல்லது பாவித்த வீணை தேவை. தொடர்பு: க. தம்பிமுத்து. 268/5, நாவலர் றோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4438

## வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையில் நவீன வசதிகள் யாவும் கொண்ட வீட்டில், ஒரு அறை குசினிவசதியுடன், வேலை செய்யும் இரு பெண்களுக்கு குறைந்த வாடகைக்கு உண்டு நேரில் வரவும். இன்று ஞாயிறு மாத்திரம். 250/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரான்லிக் கல்லூரி வீதிக்குக்கிட்ட). 4436

12/1, அருளம்பலம் லேன், அரியாலையில் சகல வசதியுடன் விசாலமான வீடு வாடகைக்குண்டு. 6-9-82இல் எந்நேரமும் நேரில் பார்வையிடலாம். விபரங்களுக்கு:போன் 692இல் Dr அருளம்பலம்அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 4423

## கேள்வி அறிவித்தல்

### முல்லைத்தீவு-கல்வித் திணைக்களம்

முல்லைத்தீவுப் பிரதேசகல்விப் பணிப்பாளர் 08-09-1982-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுவதற்கான சீல் வைத்த கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். கேள்விப் பத்திரமும், மேலும் தேவையான விபரமும் 06-09-1982ந் திகதி பி. ப. 3-00 மணிவரையும் மேற்படி கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம். இதுபற்றிய பூரண விபரத்தை 27-08-1982ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பார்வையிடவும்.

வீ. கே. நல்லையா,
பிரதேச கல்விப் பணிப்பாளர்,

முல்லைத்தீவு,
1982-09-01 4425

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஓடக்கரை வீதி பாலவுடையார் ஒழுங்கை சந்தி உடைந்த பாலம் திருத்திக் கட்டல் அமைப்பு வேலைக்கான மீள் கேள்வி அறிவித்தல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பு வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 16-09-82ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 15-09-82ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/-ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
03-09-82 4424

## ஓராண்டு நினைவு அஞ்சலி



நோற்றம்: 17-2-1955
மறைவு- 17-8-1981
ஜெனீவா]

அமரர்
செல்லத்துரை இராமச்சந்திரன்
[மனோன்]

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
தாய், சகோதரர், உறவினர், நண்பர்.
ராணிவாசா கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
4435

### காரில் வந்த கோஷ்டியினால்

# துணுக்காய் ஆஸ்பத்திரி டாக்டர் தாக்கப்பட்டார்!

(துணுக்காய்)

துணுக்காய், வவுனிக்குளம் பாண்டியன்குளம் பகுதிகளின் சேவைக்குட்பட்ட மல்லாவி அரசினர் வைத்தியசாலை உதவி வைத்தியர் கடந்த 2-ம் திகதி இரவு இனந்தெரியாத பேர்களால் தாக்கப்பட்டுள்ளார். இந்நிலமையால் அன்றுதினம் மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. வைத்தியசாலையின் சகல பகுதி வேலைகளும் இடைநிறுத்தப்பட்டதுடன் நோயாளிகள் பல மணித்தியாலமாக ஆஸ்பத்திரியில் நின்றுவிட்டு வீடு திரும்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மேற்படி ஆஸ்பத்திரி வளவிலேயே இந்த உதவி வைத்தியரின் விடுதியில் அவர் குடும்பமாக வாழ்ந்து வந்தார் என்றும் சம்பவதினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் 5 பேர் காரில் வந்து இந்த உதவி வைத்தியரின் வீட்டுக்கு முன்பாகக் காரை நிறுத்திவிட்டு ஒருவர் இறங்கிவந்து அவரைக் கூப்பிட்டதாகவும் அவர் தமது பங்களாவைவிட்டு வெளியே வந்தபோது ஒருவர் கடும் வருத்தமாக அவதிப்படுவதால் அவரை உடனடியாக மருந்து கொடுத்துக் காப்பாற்றவேண்டுமென மன்றாடவும் உடனே உதவி வைத்தியர் ஆஸ்பத்திரி வளவைவிட்டு கார் நிற்பாட்டியிருந்த இடத்தை அணுகி காரிலிருந்தவர்களை விசாரித்து என்ன தடந்தது என்று கேட்டபோது அருகில் நின்ற இரண்டுபேர் அவரைத் தாக்கியதாகவும் உடனே வைத்தியர் கூக்குரலிடவே ஆஸ்பத்திரி ஊழியர்கள் கார் நின்ற இடத்துக்கு விரைந்து வந்தபோது சந்தேகநபர்கள் எல்லோரும்

(5ம் பக்கம் பார்க்க)

## கேள்விப்பத்திரம்

### ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை.

2000 (இரண்டாயிரம்) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2-50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் ''பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை'' என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 10-9-82ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 9-9-82ந் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப் படும். விண்ணப்பதாரர் ரூபா 750/- வைப்புப்பணம்செலுத்தி இருத்தல் வேண்டும்.

பதில்
பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை
4397 30-08-1982


யாழ்நகரில்

பலவகைப் பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன் ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


உ
சிவமயம்

## நன்றி நவிலல்

1-9-82ல் நடந்தேறிய எமது மாங்கல்யநாண் பூட்டு வைபவத்தில் பங்குபற்றியோர்க்கும், வாழ்த்துக்கள், உதவிகள், பரிசில்கள் வழங்கியோர்க்கும் எமது மனமுவந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் நன்றிகூற இயலாமைக்கு வருந்துகிறோம்.

ச. ஸ்ரீ. சௌரிபாலாவும்
பாரியார் சுகிர்தாதேவியும்

பரவிப்பாஞ்சான்
கிளிநொச்சி (4414)

உ

## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன்
வே. சிவலிங்கம் (கிளி)
உரிமையாளர்: அருள்-சிவா றேடிங் கொம்பனி, இருபாலை

மணமகள்: செல்வி
பொன்னுத்துரை மகேஸ்வரி
திருநெல்வேலி கிழக்கு.

இடம்: திருநெல்வேலி சிவன்கோயில்
காலம்: 6 9—1982 திங்கட்கிழமை
முற்பகல் 10-52 தொடக்கம் 12 மணி வரை.

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி வே. வள்ளியம்மை—
திரு / திருமதி செல்லம்மா பொன்னுத்துரை,
திருநெல்வேலி கிழக்கு.
4432

# டூனிஷியாவில் யாஸீர் அரபாத்துக்கு மகத்தான வரவேற்பு!

## ஜனதிபதி ஹபிப் போகிபா ஆரத்தழுவி வரவேற்ருர்!

லண்டன், செப். 4

பெய்ரூட்டிலிருந்து வெளியேறி நேற்றிரவு டூனிஷியா போய்ச்சேர்ந்த பாலஸ்தீன இயக்கத் தலைவர் ஜனுப் யாசீர் அரபாத்துக்கு டூனிஷியா விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

டூனிஷிய ஜனுதிபதி திரு. ஹபிப் போகிபா விமானப்படிகளிலிருந்து வேகமாக இறங்கி வந்த ஜனுப் அரபாத்தை ஆரத்தழுவி முத்தமிட்டு வரவேற்ருர்.

ஏதன்ஸிலிருந்தே பாலஸ்தீன இயக்கத்தலைவர் டூனிஷியாவுக்குப்புறப்பட்டார். வட ஆபிரிக்க நாடான டூனிஷியாவுக்கு ஏதன்ஸிலிருந்து மத்திய தரைக்கடல் மேலாக பறந்து சென்ற யாசீர் அரபாத்தின் விமானத்துக்கு இத்தாலிய, கிரேக்கம், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் விமானப்படை விமானங்கள் பாதுகாப்பளித்துச்சென்றன.

டூனிஷிய விமான நிலயத்தில் ஜனுப் அரபாத் வழங்கிய பேட்டியொன்றில் பாலஸ்தீன இயக்கத்தினர் தமது தாய் நாட்டையும், புனித நகரான ஜெருசலத்தையும் மீட்கவே தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தமது முயற்சிகளிலிருந்து சற்றும் ஓயவில்லை' என்று கூறினுர். (கி)

அணுகுண்டை தடை செய்க!

## நோபல் பரிசு பெற்ற 97 பேர் கோரிக்கை

வார்ஸோ, செப். 4

அணு ஆயுதப் பாவனையைக் குறைத்து இவற்றினை முற்ருகத் தடை செய்ய வேண்டுமென்று நோபல் பரிசு பெற்ற 97 அறிஞர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

1957ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு மேற்கு நாடுகளின் விஞ்ஞானிகள் அமைப்பின் 32வது கூட்டத்திலேயே நோபல் பரிசு பெற்ரோர் மேற்குறிப்பிட்ட கோரிக்கையை ஒரு தீர்மானமாக எடுத்தனர்.

இக்கூட்டம் போலந்தின் தலைநகரான வார்ஸோவில் நடைபெற்றது [கி]

அமெரிக்காவின்

## மத்திய கிழக்கு சமாதான திட்டத்தை எகிப்திய பத்திரிகை வரவேற்கிறது

கெய்ரோ, செப். 4

எகிப்துக்கு விஜயம் செய்த அமெரிக்கப் பாதுகாப்பமைச்சரான திரு. கஸ்பார் வெயின் பேகர் அமெரிக்காவின், மத்திய கிழக்கு அமைதி குறித்த திட்டம் சம்பந்தமாக எகிப்திய வெளிநாட்டமைச்சர் ஜனுப் கமல் ஹசன் அலியுடன் உரையாடினுர்.

அமெரிக்காவின் இந்த அமைதித் திட்டத்தை எகிப்தில் இருந்து வெளியாகும் அல்–அக்பர் என்ற பத்திரிகை வரவேற்றுள்ளது.

பாதுகாப்பமைச்சர் திரு. வெயின் பேக்கர் எகிப்திய வெளிநாட்டமைச்சருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிக் கருத்து வெளியிடுகையில், எகிப்து அமெரிக்காவின் யோசனைகளை ஏற்றுள்ள சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் அமைதித் திட்டமான ஜோர்தானின் உதவியுடன் ஜோர்தான் மேற்குக் கரையிலும், காஸாவிலும் பாலஸ்தீனியர்களைக் குடியமர்த்துவதனை, இஸ்ரேலிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் அங்குள்ள எதிர்க்கட்சி அமெரிக்கரின் இத்திட்டத்தை ஓரளவு வரவேற்கின்றது.

### பெய்ரூட்டில் பிரெஞ்சு அதிகாரி கொலை!

இது இவ்வாறிருக்க பெய்ரூட்டிலிருந்துவரும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பாதுகாப்புப் படையில் அங்கம்வகிக்கும் பிரெஞ்சுத்துருப்புக்களின் அதிகாரி ஒருவர் பெய்ரூட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். வலது – இடதுசாரிக் கூட்டத்தவரிடையே ஏற்பட்ட மோதலொன்றின்போதே இவரது மரணம் சம்பவித்ததென்று கூறப்பட்டது. [கி]

இந்தோனேஷியாவில் சம்பவம்:

## தீர்ப்பில் அதிருப்தியடைந்தபெண் நீதிபதியைத் தாக்கினுர்!

ஜகார்த்தா, செப். 4

மாவட்ட நீதிபதியொருவரின் தீர்ப்பில் அதிருப்தி அடைந்த பெண்மணி ஒருவர் அந் நீதிபதியைக் கைகளால்தாக்கி அவரது உடையையும், மேசை மீதிருந்த அவரது ஏனைய ஆவணங்களையும் கிழித்த சம்பவமொன்று இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகர்த்தாவின் மத்திய மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி இந்தோனேஷியாவின் இராணுவப்பத்திரிகையொன்று கொடுத்துள்ள விபரத்தில் மாவட்ட நீதிபதியான திரு. ரியான்டோ நபர் ஒருவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக போதிய சாட்சியங்கள் இன்மையால் அந்நபரை விடுதலைசெய்து தீர்ப்பளித்தாராம்.

ஆனுல் இவ்வழக்கினைத் தாக்கல் செய்தவரான பெட்ஸி சினுகா என்றபெண்மணி நீதிபதியின் தீர்ப்பில் அதிருப்தி கொண்டு ''எப்படி அவரை விடுதலைசெய்வீர்?'' ''நீதி எங்கே இருக்கிறது?'' என்று கேள்விகளைக்கேட்டுக்கொண்டு நீதிபதி மீது தாக்குதலை நடத்தினுராம்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற அதிகாரிகள் உடனடியாக அப்பெண்களை வெளியே இழுத்துச்சென்றுனரர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## கரவெட்டி பிரதேசசபைக் கூட்டங்கள்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அராங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றுவரும் இப்பிரிவு பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டம் இனிமேல் அங்கே நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப் பட்டுள்ளது கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது

இப்பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டம் பிரதேச சபைத்தலைவர் திரு. ந பாஸ்கரன் தலைமையில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் காரியாலத்தில் நடையெற்றது.

கூட்டத்தில் பிராதச சபைக் கூட்டத்தை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடத்துவதில் இடவசதியீனம் ஏற்பட்டுள்ளதாக மேலிடம் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இனிமேல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மாதாந்தக் கூட்டத்தை நடாத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது.

பிரதேச சபைக்கூட்டத்தில் சமூகமளிக்காத திணைக்கள அதிகாரிகள் பற்றியாழ் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வருவது என்றும், விசேட சேவை உத்தியோகத்தர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வது பற்றி உதவி அரசாங்க அதிபரைக் கோருவது என்றும் தீர்மானங்கள் நியைவேற்றப்பட்டன. (அ)

முன்னுள் ஜனுதிபதி

## டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்ததினம் இன்று

(சென்னை)

இந்திய முன்னுள் ஜனுதிபதியும் தத்துவ ஞானியுமான சர்வபள்ளி கலாநிதி இராதாகிருஷ்ணனின் பிறந்த தினம் இன்ருகும்.

இத்தினம் இந்திய ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. சென்ற ஆண்டில் சிறந்தஆசிரியர்களாகத்தெரிவு செய்யப்பட்ட இந்தியமாநிலங்களைச் சேர்ந்த 100 ஆசிரியர்களுக்கு இன்று ஜனுதிபதி ஸெயில்சிங்விருதுகளைவழங்கிக் கௌரவிப்பார்.

விருதுகள்பெறும் ஒவ்வொரு ஆசிரியரும் 1500 ரூபா ரொக்கத்தையும், வெள்ளிப்பதக்கமொன்றையும், சான்றிதலையும் பெறுவார்கள்.

தமிழ்நாட்டில்அமைந்துள்ள வள்ளுவர்கோட்டத்தில்இன்று தமிழகத்தின் நல்லாசிரியர்களுக்கான விருதுகளை முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் வழங்குவார். (கி)

செல்வந்த நாடுகள்

## உலக வங்கிக்கு நிதிஉதவி வழங்க முன்வந்துள்ளன

லண்டன் செப். 4

உலகவங்கிக்கு கூடுதலான நிதியை வழங்க செல்வந்த நாடுகள் சில முன்வந்துள்ளன. இதனுல், வறியநாடுகளுக்கு உலகவங்கியால் வழங்கப்படும் நிதியுதவி அதிகரிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

மேற்கு ஜெர்மனி, ஜப்பான் பிரிட்டன், சவுதிஅரேபியா போன்ற நாடுகளே உலகவங்கிக்கு பணத்தைச்செலுத்த முன்வந்துள்ளன. அமெரிக்கக்காங்கிரஸிலும் உலகவங்கிக்கு நிதி உதவி வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலகவங்கியின் ஓர் அங்மாக இயங்கும் சர்வதேசஅபிவிருச் சங்கத்திற்கே மேற்குறிப்பிட்ட செல்வந்தநாடுகளின் நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது சர்வதேச அபிவிருத்திச்சங்கத்தின் கையிருப்பில் 270 கோடி டாலர்கள் இருக்கின்றன. செல்வந்த நாடுகள் வழங்கவிருக்கும் நிதியுதவியையடுத்து இக்கையிருப்புத் தொகை 1983ல் 330கோடி டாலர்களாகவும், 1984–ல் 370 கோடி டாலர்களாகவும் அதிகரிக்குமென்றுதெரிவிக்கப்பட்டது' (கி)

# கேரளாவில் நஞ்சு கலந்த சாராயம் குடித்த 41 பேர்பலி!

## 300பேர் சிகிச்சை பெறுகின்றனர்

திருவனந்தபுரம், செப். 4

கேரள மாநிலத்தில் கொச்சின் என்ற இடத்துக்கருகில் உள்ள சிறு தீவொன்றில் நச்சுத் தன்மை வாய்ந்த சாராயத்தை அருந்தியதில் 41 பேர் இறந்துள்ளனர். 300 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தோர் தொகை படிப்படியாகவே அதிகரித்துள்ளது.

இந்த நச்சுத் தன்மை வாய்ந்த கள்ளச் சாராயத்தை தயாரிப்பதில் ஈடுபட்ட ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் வசமிருந்த கள்ளச் சாராயம் முழுவதையும் அவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கேரள மாநிலத்தின் அமைச்சர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கள்ளச் சாராயம் அருந்தியவர்களைப் பார்வையிட்டார்.

இந்தக் கள்ளச் சாராய விற்பனை தொடர்பாக பூரண நீதி விசாரணையொன்று நடத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

தமிழ் நாட்டில்

## நீடித்த நிர்வாகத்துக்கு புதிய ஆநளுர் பாராட்டு

சென்னை, செப். 4

''இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு சகல மாநிலங்களும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும்.'' என்றுதமிழ்நாட்டின் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள திரு. எஸ். எச். குரானு கேட்டுக்கொண்டார்.

தமிழகஆளுநராகப் பதவியேற்றபின்னர்வானுெலிமூலம் தமிழக மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே திரு குரானு மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் பதவிக்குவரும் கட்சிகளின் நீடித்த நிர்வாக அமைப்பைப் பாராட்டிய திரு. குரானு, விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு தமிழகம் தனது பங்களிப்பைச் செய்யவேண்டுமென்றும் கூறி இத்துறைகளில் அது கொண்டுள்ள நிலையையும் பாராட்டினுர்.

இந்திய கலாச்சாரம், ஆன்மீகத்துறை ஆகியவற்றில் தமிழகத்துக்குள்ள ஈடுபாட்டினையும் புதிய ஆளுநர் பாராட்டினுர். (கி)

# இந்தியப் பத்திரிகையாளர் போராட்டம்!

இந்தியாவில் பீகார் மாநில அரசு உருவாக்கியுள்ள சர்ச்சைக்குரிய பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் இந்தியாவிலுள்ள பத்திரிகைஸ்தாபனங்களையெல்லாம் ஆத்திரங்கொண்டு எழச்செய்துள்ளது.

பொது மனிதர்களைப் பயமுறுத்தி காரியம் சாதிக்கும் விதத்தில் பத்திரிகைகளில் செய்தி வெளியாகுதல், கட்டுரை வரைவது போன்ற அம்சங்கள் வெளியாவதைத் தடுப்பதற்காக இச்சட்டம் கொண்டுவரப்படுவதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சட்டம் பத்திரிகையாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில் அமைந்திருப்பதாகப் பத்திரிகையாளர் இயக்கங்கள் குற்றஞ் சாட்டுகின்றன. சட்டத்தில் அமைந்துள்ள சொற்கள் தெளிவற்றிருப்பதால் சமயத்தில் அரசியல் காரணங்களுக்காகவும் அவை பயன்படுத்தப்படலாம் என்று பத்திரிகையாளர்கள் அஞ்சுகின்றனர்.

## வேலைநிறுத்தம்

இச்சட்டத்தை எதிர்த்து கடந்த மூன்றும் திகதி நாடு முழுவதிலுமுள்ள பத்திரிகையாளர்கள் ஒருநாள் வேலைநிறுத்தம் செய்தனர். இந்திய தேசிய பத்திரிகையாளர் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட இந்த வேலை நிறுத்தத்தில் நாடு முழுவதுமுள்ள பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டதால் முக்கியமான பத்திரிகைகள் எதுவும் வெளிவரவில்லை. ஆனால் திருமதி இந்திராகாந்திக்கு ஆதரவான நெஷன் ஹெறல்ட் பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை.

பீகார் மாநிலம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் இருக்கின்றது. கடந்த

## ஜனாதிபதி தேர்தல்: கட்சிகளின் நிலவரம்

இரண்டாம்திகதி பீகார் மாநிலத்திலுள்ள பத்திரிகையாளர் அனைவரும் 10 மணி நேர உண்ணாவிரதம் ஒன்றை அனுஷ்டித்தனர் பத்திரிகைச் சட்டம் மாநில சட்ட மன்றங்களில் நிறைவேறிவிட்டபோதிலும் இன்னமும் ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. ஜனாதிபதியின் அங்கீகாரத்தின் பிறகே அது சட்டமாகும். அவதூறாக எழுதும் பத்திரிகையாளர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்க இச்சட்டம் வழிசெய்கின்றது.

### இந்திரா ஆதரவு

நாடு முழுவதும் பத்திரிகையாளர்களின் எதிர்ப்பு அதிகரித்துவருவதால் இந்திய அரசு இதில் அக்கறைகாட்டத் தொடங்கியிருக்கின்றது. ஆனால் பிரதமர் திருமதி காந்தி இச் சட்டம் எழுத்துச் சுதந்திரத்தைப் பாதிப்பதாக இல்லை என்றே கருதுவதாகத் தெரிகின்றது.

சில தினங்களுக்குமுன் லக்னோவில் கூட்டமொன்றில் பேசிய திருமதி காந்தி இச்சட்டம் ஒரு பயமுறுத்தலாகக் கருதப்படக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

''இம்மாதிரி சட்டங்கள் வேறு இரு மாநிலங்களில் ஏற்கனவே அமுலில் இருக்கின்றது. பத்திரிகை சுதந்திரம் தனிப்பட்டவர்களின் ஆளுமையைக் கொலை செய்வதாக இருக்கமுடியாது. தேசத்தின் மதிப்பையே கெடுக்கும் விதத்தில் சில பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றன'' என்று திருமதி காந்தி கருத்து வெளியிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

பி. எஸ். பி.

இவ்வாறு திருமதி இந்திரா காந்தியும் பீகார் மாநில அரசின் சட்டத்துதை ஆதரிப்பதால் பத்திரிகையாளர்களின் போராட்டம் பிசுபிசுத்துவிடுமா அல்லது இந்திரா அரசுக்கு பத்திரிகையாளர்கள் பெரும் தலையிடியைக் கொடுக்கப்போகிறார்கள் என்பது இனிமேல்தான் தெரியவேண்டும்.

0 0

இந்தியாவில் பத்திரிகைச் சுதந்திரமும் பத்திரிகையாளர்களுக்கான வசதிகளும் நம் நாட்டைவிட மிகத்தாராளம் என்று தான் கூறவேண்டும். அங்கு பத்திரிகையாளர்களின் சம்பளம், வேலைநிலைமைகளைப் பார்க்கவென்றே பத்திரிகைச் சபை சம்பளச்சபைகள் உண்டு இங்கு? கேள்விக்குறிதான் பத்திரிகையாளர்களின் நன்மைக்காக ஏதேதோ சட்டங்கள் எல்லாம் தயாராகிக் கொண்டிருப்பதாக முன்பு பெரிதாகச் செய்திகள் அடிபட்டன அதோடு முடிந்து விட்டது.

பத்திரிகையாளர் சங்கம் ஒன்றும் கொழும்பில் இயங்குகின்றது. ஆனால் பத்ரிதிகையாளர்களின் நிலைமை எப்போதும்போலவே இருந்து வருகிறது.

### மானியமும் டாம்பீகப் பொருட்களும்

அரசு இப்போது 175 கோடி ரூபாவை உணவு முத்திரைகளுக்காக ஒதுக்கிவருகின்றதாம். இத்தொகை இந்த வருடத்தில் மேலும் அதிகரிக்கப்படும் என்று வர்த்தக மந்திரி திரு.லலித்அத்துலத் முதலி அறிவித்திருக்கிறார். 10 கோடி ரூபாய் குழந்தைகள் உணவுக்காக மான்யமாக வழங்கப்படுகின்றது. இலவசப் புத்தக விநியோகத்தினால் 3 கோடி 20 லட்சம் செலவாகின்றது. இந்தப் பணம் முழுவதும் அரசு வரிகள் மூலம் பெற்றுக்கொள்ளும் பணத்திலிருந்தே செலவிடப்படுகின்றது. இந்தச் செலவுகளில் இறக்குமதி செய்யப்படும் டாம்பீகப் பொருட்கள் 5 வீதம் கூட இருக்கவில்லை கடந்த வருடம். அதிலும் அவசியம் தேவைப்படும் சைக்கிள் டயர்கள், டியூப்கள், போன்றவையும் டாம்பீகப் பொருட்களாகவே கணிக்கப்படுகின்றன என்கிறார் வர்த்தக அமைச்சர்.

## ஜனாதிபதி தேர்தல் வருகின்றது

ஜனாதிபதி தேர்தல் வருகின்றது இலங்கை மக்களுக்கு இது ஒரு புது அனுபவம்.

இதுவரை காலமும் நமது நாட்டில் ஜனாதிபதியை பிரதம மந்திரியே தெரிவுசெய்து வந்தார். பிரிட்டனில் அரசர் இருப்பது போல இவரும் இங்கே ஒரு அரச 'சின்னமாக'வே கணிக்கப்பட்டார்.

இந்த நாட்டின் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் பெற்ற, அதாவது சர்வ அதிகாரங்களையும் பெற்ற ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் பொறுப்பு வாக்காளர்களிடம் விடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பிரிட்டிஷ் பாணி அரசியலைக் கைக்கொண்டுவந்துள்ள நாம் இனி அமெரிக்கப்பாணியில் ஜனாதிபதித் தேர்தலை எதிர் நோக்கப்போகிறோம்.

★

### புதுமையல்ல

தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாது என்ற விடயம் புதிது அல்ல. புதுமையும் அல்ல.

ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரப்போகின்றது என்றசெய்தி வெளிவந்த சமயத்திலேயே கூட்டணியின் நிலையும் வெளியாகிவிட்டது. எனவே திருகோணமலையில் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுசபை இத்தேர்தலில் போட்டியிடுவதில்லையென்று முடிவு செய்தது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான் ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தேர்தலில் யாரை ஆதரிக்கப் ஆதரிக்கப் போகின்றது என்பதை முடிவுசெய்யமுடியாமல் போனதுதான் கவனத்துக்குரியது

[5ம் பக்கம் பார்க்க]

# இராமகிருஷ்ண முனிவர்

கடவுளை நாம் நம்முடைய புத்தக அறிவினால் புரிந்து கொள்ள முடியாது. எவ்வளவு தான் நூல்களை ஓதினாலும் நூலறிவு ஒருபோதும் கடவுளை உணர்த்தாது. இறைவன் நம் உள்ளத்துக்குள்ளே உயிர்க்கு உயிராய் இருந்து வருகிறான். 'நாமேதும் அறியாமே நம் முள்வந்து நல்லனவும், தீயனவும் காட்டி நிற்கிறான். நம்உள்ளத்துக்குள்ளே இருந்து எழும் அந்த மெல்லிய இனிய குரலொலியைக் (Small still voice within) கேட்கப் பெறும் உண்மை ஞானத்தினாலேயே, இறைவனை நாம் உணரவும் பிறர்க்கு உணர்த்தவும் இயலும்.

போனார். அடுத்தநாள் விறகுத் தலையன் வனத்தினுள் மேலும் உள்நோக்கிச் சென்றான். சந்தனக் கட்டைகள் கிடைத்தன. சில நாட்களுக்குப் பிறகு மேலும் உள்நோக்கிச் சென்றான். தாமிரக்கட்டிகள் கிடைத்தன. இன்னும் சிலநாட்களுக்குப்பிறகு உள்நோக்கிச் சென்றான். வெள்ளிக் கட்டிகள் கிடைத்தன. கொஞ்ச நாளைக்குப் பிறகுஇன்னும் உள் நோக்கிச் சென்றான். பொன், வைரம் முதலியன கிடைத்தன. மனிதன், தனது மனத்தினுள் உள் நோக்கிப் செல்லுமளவும்அரிய பொருட்களைப் பெறுவான். உணர்வினைப் புறத்தேசெலுத்தாமல், அகத்தே செலுத்தி

- ந. ரா. முருகவேள் -

'கீதம் வந்த வாய்மையாற்
கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால்
உணர்ந்து உரைக்க
லாகுமே?'

என்பது திருஞான சம்பந்தப் பெருமானின் திருமொழி.

### உள்நோக்கிக் காணல்

இப்பாடல் இராமகிருஷ்ணரின் அருள்மொழிகளையே வலியுறுத்துவனவாகத் திகழ்தல் காணலாம். இராமகிருஷ்ணர் எளிய இனிய சிறுசிறு கதைகளின் வாயிலாக உயரிய உண்மைகளை மக்களுக்கு எடுத்துணர்த்தும் இயல்புடையவர். அவர் திருவாய் மலர்ந்தருளிய சிறுகதைகள் பலவற்றுள் பின் வருவதும் ஒன்று.

விறகுத் தலையன் ஒருவன் வனத்திலிருந்து விறகுசுமந்து கொண்டு வெளியே வருவதை சாது ஒருவர் பார்த்தார். 'உள் நோக்கிப்போ' என்று மொழிந்துவிட்டு அவர் தம் வழியே

னால்தான் இறைவனை நாம் உணரமுடியும் என்னும் உண்மையினை இச்சிறுகதை உணர்த்துகின்றது. இதனையே நம் தமிழகத்தில் தவராசயோக நெறிச் சக்கரவர்த்தி எனத் தாயுமானவர் போற்றிப் புகழ்ந்த திருமூலர் பெருமான்.

முகத்திற் கண்கொண்டு
காண்கின்ற மூடர்காள்!
அகத்திற் கண்கொண்டு
காண்பதே ஆனந்தம்''

''எண்ணுயிரத் தாண்டு யோகம் இருக்கினும் கண்ணார் அமுதனைக் கண்டறிவார் இல்லை: உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால் கண்ணாடி போலக் கலந்து நின்றானே''

என அருளிச் செய்துள்ளார். இங்ஙனமே, திருநாவுக்கரசர் பெருமானும் உள்நோக்கிக் காணும் உபாசனையாகிய வழிபாட்டின் சிறப்பினை,

''மெய்ப்மையாம் உழவைச்
செய்து
விருப்பெனும் வித்தை
வித்திப்
பொய்ம்மையாம் களையை
வாங்கிப்
பொறை எனும் நீரைப்
பாய்ச்சித்
தம்மைஉள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகிற்
சிவகதி விளையும் அன்றே''

எனவரும் தேவாரத் திருப்பாடலில் அழகுற உருவகம் செய்து அருளிச்செய்திருத்தல் அறிந்து இன்புறத் தக்கது

### மடை மாற்றம்

இராமகிருஷ்ணர் எதனையும் நடைமுறைக்கு எட்டாமலும் ஏலாமலும் சொல்லுபவர் அல்லர். எளிய இனியநடைமுறைக்கு ஏற்ற வகைகளிலேயே அவர் தம் அருள் மொழிகள் அமைந்திருக்கும். ''யான் எனது என்னும் செருக்கு அஞ்ஞானத்தினின்று உதிப்பது. அஞ்ஞானம் நீங்க வேண்டுமாயின் இத்தகைய செருக்குகளை அகற்றுதல்வேண்டும் இவ்வாறே காமம் குரோதம் போன்ற தீய குணங்களையும் நாம் கைவிடுதல் வேண்டும். இவற்றை அறவே அழித்துவிட நம்பால் இயலாது. இவைகளைக் கடவுள்பால் திருப்பிவிட்டால், தீங்கு செய்வதற்குப் பதிலாக இவைகள் நமக்கு நலப்புரிவனவாகஅமையும்'' என்பது, இராமகிருஷ்ணரின் இனியதோர் உபதேசமாகும். காமம் குரோதம் முதலியவற்றை இறைவன் பால் திருப்பி விட்டால், தீங்கு செய்வதற்குப் பதிலாக அவைகள் நலம்புரியும் என்னும் இராமகிருஷ்ணரின் கருத்தையே, ''அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே'' என்றும்; ''தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' என்றும் திருமூலர் கூறியிருக்கும் நுட்பம் கருதி மகிழ்தற்குரியது.

[5ம் பக்கம் பார்க்க]

# லண்டனில் முருக தரிசனம்

'டென்னிஸ்' என்றதும் விம்பிள்டன் நினைவுக்கு வராமல் விடாது. வருடத்துக்கு ஒருமுறை உலகடெனிஸ் வீரர்கள் கூடிவிடுகிறார்கள் இங்கு.

உலக சாம்பியன் போட்டி நடக்கும் விம்பிள்டன் நகரத்தில்தான் நான் லண்டனில் இருந்தகாலத்தில் கூடியபகுதியைக் கழித்தேன்.

முருகன் கோயில் ஒன்றுதற்காலிகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒரு சிறியமண்டபத்தில் விம்பிள்டனில் அப்போது இயங்கிக்கொண்டிருந்தது.

ராஜகோபால்

லண்டனில் நீண்டகாலமாக வாழ்ந்துவரும் பெரியவர் சபாபதிப்பிள்ளை ஐயா அவர்கள் தான் இக்கோவிலை நடத்திக் கொண்டிருந்தார்கள்!

முருகன் விக்கிரகம், படங்கள் பூசைக்குரிய சாமான்கள் எல்லாவற்றையும் ஐயா அவர்கள் வெள்ளிதோறும் மாலை நேரத்தில் தனது காரில் கொண்டுவருவார்! இவைகள் மேடையில்இவைமூலஸ்தானம் போன்று அமைக்கப்படும்.

பக்தர்கள் அமர்வதற்கு கதிரைகள் போடப்பட்டிருக்கும் நமது பெண்களை யெல்லாம் சேலையுடனும், திருநீறுடனும், தலையில் சூடியபூக்களுடனும் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கும்!

சந்தனம் வழங்கப்படும், கடைசியாக கடலை, வடை, பாயாசம் வழங்கப்படும்.

லண்டன் பகுதியில் வாழும் தமிழர்களில் ஒருவர் ஒருவெள்ளிக்கிழமைபூசையைபொறுப்பு எடுப்பார். அந்த வெள்ளி அவரது பொறுப்பு. அடுத்த வெள்ளி இன்னொருவர் பொறுப்பு.

நிரந்தரமான ஒரு கோயில்

## நெஞ்சம் மறவாத நினைவுகள்--8

### பக்தி இசை

பூசைக்கு முதல், அருமையான பக்திப்பாடல்கள்இசைக்கப்படும், அனேகமாக பெண்கள் பகுதியிலிருந்து இனிமையான குரல் கானமிசைக்கும் ஒருவர் பாட, சபையில் உள்ளவர்கள் பின்னர் சேர்ந்து பாடுவார்கள். இவை எல்லாம் முடிய, முருகனுக்குப் பூசை ஆரம்பமாகும். சபாபதிப் பிள்ளை ஐயா தமிழில் இந்தப் பூசைகளை நடத்துவார், எல்லாம் முடியதீர்த்தம், திருநீறு

அமைப்பதற்கு நானிருந்த சமயம் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அங்கு வாழும் தமிழர்களின் கல்யாணங்கள் மரணச்சடங்குகள் போன்றவற்றையும் சபாபதிப்பிள்ளை அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

### கூறைச்சேலைகள் சரசரக்கும்

தமிழர்களின் கல்யாணங்கள் நமது முறைப்படி மிகவும் அழகாக, முறைதவறாது நடப்

[5-ம் பக்கம் பார்க்க]

# இராமகிருஷ்ண...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐம்பொறி புலன்களை, நாம் உலகப் பொருள்களின் பாலன்றி இறைவன்பால் தொண்டுசெய்வதற்குச் செலுத்துதலையே 'அஞ்சும் அடக்கா அறிவு' எனத் திருமூலர் குறிப்பிடுகின்ருர். நம்முடையகாமக் குரோதங்கள் முதலியனவற்றை இறைவன் பால் திருப்பிவிடின், அவைகள் மடைமாற்ற (Sublimation) பெற்று தீங்கு செய்வதற்கு மாருக நலம் புரியும் இயல்பினவாக மாறும் என்பதனையே திருமூலர் ''தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' என்று குறித்தருளினர். இவ்வாற்ருல் இராமகிருஷ்ணருக்கும் திருமூலருக்கும் உள்ள கருத்தொப்புமை, பெரிதும் உணர்ந்து போற்றத்தக்கது.

## அழுகையும் அருட்பேறும்

இராமகிருஷ்ணர் தம்முடைய அன்பர்கள் பலரையும், ''நீர் இறைவனை அடைய விரும்பி அழுதது உண்டா?'' (Have you wept for God? Have you shed tears for Him?) எனக்கேட்பதுவழக்கம். இதற்குக் காரணம், அன்னை காளிதேவியின் அருளை அவர் பலகால் அழுதழுது பெற்றமையேயாகும். ஒவ்வொரு நாளும் பொழுது சாயும் மாலைவேளைகளில், 'ஐயோ! அன்னையின் காட்சி கிடைக்காமல் இன்று ஒரு நாள் வீணுகப்போய் விட்டதே! அன்னையின் அருட்காட்சியைப் பெருமல் நாட்கள் ஒவ்வொன்ருகக் கழிந்து கொண்டிருக்கின்றனவே!' என்று இராமகிருஷ்ணர்அழுது புலம்பி அரற்றும் இயல்புடையவராக இருந்தனர் வரலாறு.

சமயவாதிகள் ஒரு சிலர் இவ்வுலகம் இருள்மயமானது துன்பம் நிறைந்தது, கொடியது, வெறுக்கத்தக்கது என்றெல்லாம் இகழ்ந்துகூறுவது உண்டு. இத்தகைய மருள் நோக்கு (Pessimism) உடையவரல்லர் இராமகிருஷ்ணர். இவ்வுலகம் இழிந்தது என்றும், மனிதர்களாகிய நாம் பாவிகள் என்றும், சிலர் இடைவிடாமல் கூறிக்கொண்டிருப்பதை இராமகிருஷ்ண ஏற்றுக்கொள்ளவில்லை இராமகிருஷ்ணர் தெருள் நோக்கு (Optimism) மிக்கவர். இவ்வுலகில் எங்கும் எதிலும் இறையருள் தன்மையைக் காணும் பேறுபெற்றவர். ஆதலின் அவர் இவ்வுலகை இருள்மயமாக அன்றி, எழில் மயமாகக் கண்டார். இவ்வுலகம் கொடியதும் வெறுக்கத்தக்கதும் இழிந்ததும் அன்று; இவ்வுலகில் நம் செவ்விதின் வாழ்தல் இயலும் என்பது, இராமகிருஷ்ணரின் திருவுள்ளம். இக்கருத்தினையே பெரிதும் ஏற்றுப் போற்றி வலியுறுத்தும் வகையில்,

''மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம்; வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு
யாதும்ஓர் குறைவில்லை;
கண்ணில் நல்லஃ துறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே''

எனத் திருஞானசம்பந்தப் பெருமான் அளிச்செய்திருத்தல், ஒப்பிட்டுநோக்கி மகிழ்ந்துணர்தற்பாலது; 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்: வைகலும் வாழலாம்;' எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை' என வரும் திருமொழிகள், திருஞானசம்பந்தப் பெருமானின் தெருள் நோக்குக் கொள்கையினை, எத்துணை அழுத்தம்திருத்தமாகத் தெரிவிக்கின்றன, காண்மின்கள்!

## எல்லாம் இறைசெயல்

''ஒரு சமயம் திருமாலும் திருமகளும் வைகுந்தத்தில் இனிது கலந்து உரையாடி மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்போது திருமால் திடீரென்றுஎழுந்துவெளியே சென்ருர். அப்போது திருமகள் அவர் எங்குச்செல்கின்ருர் என்று அறிய விரும்பினுள். அதற்குத் திருமால் 'என் பக்தன் ஒருவனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று சொல்லிச் சென்ருர். ஆனுல் அவர் ஒரு நொடிப் பொழுதிலேயே திரும்பி வந்துவிட்டார். அதுகண்ட திருமகள் 'இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டீர்களே, ஏன் என்று கேட்டாள். அதற்குத் திருமால், 'வண்ணுன் ஒருவன் புல்தரையில் விரித்திருந்த வெளுப்புத் துணிகளின் மீது; தன்னை மறந்து மகிழ்ந்திருந்த நிலையில் என் பக்தன் ஒருவன் கால்வைத்து மிதித்துவிட்டான். வண்ணுன் அப்பக்தனை அடிக்க ஓடினுன். அப்பக்தனைக் காப்பாற்றுவது கடமை என்று கருதி நான் புறப்பட்டேன். ஆனுல் அப்பக்தனே வண்ணுனைத் திருப்பி அடிக்கக் கல் ஒன்றை எடுத்தான். உடனே நான் இனி நமக்கு அங்கு வேலை இல்லை என்று திரும்பிவிட்டேன்என்று திருமால் கூறினுர்.'' இது இராமகிருஷ்ணர் கூறிய ஓர் இனிய சிறுகதை. யான்எனது என்னும் செருக்கும், என் செயல் என்னும் முனைப்பும் அற்றெழிந்தால்தான் நமக்கு இறையருளும், ஞானமும் கைகூடும் என்பது இதன் கருத்து.

## முடிவுரை

இங்ஙனம் எத்தனையோ பல இனிய அருளுபதேசங்கள் இராமகிருஷ்ண மாமுனிவரால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றுள்ளன. அவைகளுள் ஒவ்வொன்றும் நம் அறிவுக்கு விருந்தாய், ஆருயிர் நலத்திற்கு அமிழ்தமாய் சிறந்து விளங்குகின்றன. அருளாளர்களின் அமிழ்த மொழிகள் வாழ்க்கையாகிய வழுக்குநிலத்தில் வீழ்ந்து தடுமாறும் நம்மனோர்க்கு வழுக்காமல் நடந்து செல்ல உதவும் ஊன்றுகோல் போலப் பயன்படுவனவாகும்.

(திருக்கோயில்)

---

# லண்டனில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பதைக்கண்டேன்!

கூறைச்சேலைகள் சரசரக்கு தங்க நகைகள் மின்னும்! இலங்கைக்கு, அதுவும் யாழ்ப்பாணத்துக்கே வந்துவிட்டோமா என்ற உணர்வு ஏற்படும்.

லண்டனில் வாழும் தமிழர்களுக்குச் சப பதிப்பிள்ளை அவர்கள் நல்ல சேவை செய்து வருகிருர்கள்! 'லண்டன் முரசு' என்ற தமிழ் சஞ்சிகையின் நிறுவகரும் இவரே! இவரது புதல்வர் சதானந்தன் தான் 'லண்டன் முரசு ஆசிரியர்.

ஆரவாரமின்றி முற்றுமுழுதாக வேறுபட்ட ஒரு சூழ்நிலைக்குள்ளிருந்து கொண்டு தமிழ்ப்பண்பும் கலாசாரமும் தடுமாருமல் பணி செய்து வருகிருர் சதானந்தன்!

## சதானந்தன்

காலையிலோ அல்லது மாலை நேரத்திலோ அவரைச் சந்திக்கப்போனுல், அவர் பூசை அறையில் இருப்பார். மேல் மாடியிலுள்ள அவரது பூசை அறையிலிருந்து இனியகானம் வந்துகொண்டிருக்கும்! 'லண்டன் முரசு' அலுவலகமும் அவரது வீட்டின் ஒரு அறையில் இருக்கிறது. அவருக்கு உதவியாக, அவரது மனைவி ஞானு 'முரசு' வேலைகளையும் செய்கிருர். 'செந்தாமரை' என்று அழகான தமிழ்ப்பெயரைத் தன்மகளுக்குச் சூட்டியிருக்கிருர்,

பத்து வருடங்களுக்கு மேலாக தமிழ் சஞ்சிகையொன்றை நடத்திவரும் 'சதா', கடந்த இருமாதங்களாக சஞ்சிகையை வெளியிடாமல், உற்சாகம்குறைந்த இருக்கின்ருர் என்ற செய்தியொன்று கவலையை அளிக்கின்றது!

அமெரிக்காவில் கண்ணதாசன் காலமானுரல்லவா! கண்ணதாசனை அங்குள்ள தமிழ்ச் சங்கத்தினர்தான் தமது விழாவுக்கு சொற்பொழிவுக்கு அழைத்திருந்தார்கள்.

அதேவிழாவுக்கு 'சதா'வையும் கலந்துகொள்ள அமெரிக்காவுக்கு அழைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் சதா உரையாற்றினுர் நல்ல செல்வாக்கும், தமிழுணர்வும் உள்ள 'சதா' பத்திரிகையுலகிலிருந்து ஒய்ந்து விடக்கூடாது!

★

விம்பிள்டனில் நம்மவர்களுடன் மிக நெருங்கிய விஷயம் ஒன்று இருகிறது.

அரசியல் கூட்டங்களும். தமிழ்படங்களும் இங்கு அடிக்கடி நடக்கும்.

## தமிழ்ப்படங்கள்

தமிழ்ப்படம் மாதத்தில் ஒன்ருவதுநான் இருந்த சமயத்தில் திரையிடப்பட்டது. விம்பிள்டன் தியேட்டரில் இப்படங்கள் திரையிடப்படுகின்றன. இந்தப் படக்காட்சிகளின் போது, நம்மவர்களை எல்லாம் சந்திக்கலாம். படம் முடிந்து போகும் போது, கூட்டம் கூட்டமா நின்று ஊர்கதைகள் சுகதுக்கங்கள் விசாரித்துச் செல்லும் காட்சி படத்தைவிட நன்ருக இருக்கும்! நமது ஊர் தமிழ்படம் ஓடுகிற தியேட்டரைப்போல கலகலப்பாக இருக்கும்!

ஒன்றிரண்டு சிறிய மண்டபங்கள் இங்கு இருக்கின்றன. இவற்றில்தான் வெளியிலிருந்து வரும் தமிழ் அரசியல் தலைவர்களின் கூட்டங்களை நடாத்துகிருர்கள்!

அங்குள்ள நம்மவர்களுக்கு அரசியலில் அவ்வளவுஅக்கறையில்லை! படமொன்றுக்கு கூடும் கூட்டத்தில் பத்தில் ஒரு பங்காவது வருமா என்பது கூடச் சந்தேகம்.

ஓய்வு நேரத்தில் பொழுது போகஅரசியல்பேசுபவர்களைத்தான். நான் அங்கு நிறையக் கண்டிருக்கிறேன்

லண்டனில் நம்மவர்களைப் பொறுத்தவரையில். நூற்றுக்குத் தொண்ணுற்று ஒன்பது பேருக்கு 'அரசியல்' விஷயத்திலிருந்து ஒதுங்கே நடக்கிருர்கள்!

அந்தளவுக்கு அங்கு 'பிஸி'!

---

# துணுக்காய்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காரில் ஏறி ஓடி மறைந்துவிட்டதாகவும் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் யாவரும் அடுத்தநாள் தமது கடமையைச் செய்யாது பகிஷ்கரித்தனர். இதனுல் நோயாளிகள் பலர் பாதிப்புக்குள்ளாயுள்ளதுடன் அவசர சேவைகளும் பாதிப்படைந்தன. இதுசம்பந்தமாக மாங்குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

---

# ஈழத்துக் 'குயில்'...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

எமது குரலுக்கு மெருகூட்டி ஈழத்துக்கு பெருமை தேடித் தருகிருர். என்போன்றவர்களின் குரல் வளத்தை நன்கு பயன்படுத்தி, பலநவீனஇசைக் கருவிகளின் துணையுடன் பாடல்கள் அமைத்து ஈழத்தின் திறமையை வெளிக்கொணர வேண்டும் இசைஅமைப்பாளர்களின் கையில்தான் எமது ஒளிமயமான எதிர்காலம் தங்கி முழுக்க முழுக்க யிருக்கிறது. இதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் பெரும் பங்குண்டு. விருப்பு வெறுப்பின்றி திறமையைக் கருத்திற்கொண்டுநிறையச் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும். இசை அமைப்பாளர்கள் எம்மை கைதூக்கிவிட வேண்டும்'' என்று ஆவல் வெளியிட்ட திருமதி சரோஜினி பொன்னுத்துரை—

''தாய்தந்த ஊக்கமும், கணவர் அளிக்கும் ஆதரவும் எனது நீண்டநாள் தமிழக ஆசையை நிச்சயம் நிறைவு செய்யும்'' என்கிருர். இலைமறை காயாக இருக்கும் அவர்கனவு நனவாகட்டு.

---

# ''இறைவனை அடைய வழிபாடு உளத்தூய்மை தேவை''

--பட்டிமன்றில் தீர்ப்பு

''இந்தச் சரீரம் நமக்குவழங்கப்பெற்றது நாம் கடவுளை நன்கு வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டே. அவன் சந்நிதியினுல் சிறந்த சாதனைகள் செய்வது நமதுகடமையாகும். இதுவே நமது வாழ்க்கையின் குறிக்கோளாக அமைய வேண்டும். உடல் அழியும் தன்மையுள்ளது; ஆன்மா அழியாதது''

இவ்வாறு வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. மூ. சி. சீனித்தம்பி கடவுளை அடைய சிறந்தவழி ஆலய வழிபாடா உள்ளத்தூய்மையா? என்ற பொருளில் நடைபெற்ற பட்டி மன்றத்துக்கு நடுவராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இவர் தமது தீர்ப்பில் கடவுளை அடைய ஆலய வழிபாடு உள்ளத்தூய்மை ஆகிய இரண்டும் தேவை என்று தெரிவித்தார்.

திரு. மூ. சி. சீனித்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது!

''எச்சமயத்திற்கும் கோவில் அவசியம். கோவில் இலாதா சமயம் இல்லை ஆயிரக்கணக்கான மக்களின் கடவுள் பக்தியானது கோவில்களால் காக்கப்பட்டு வருகின்றது; மக்களை நல்வழிப்படுத்த ஆலய வழிபாடு மிக முக்கியமானது.

நல்ல மாறுதல்கள் மக்கள் மனதில் ஆலயத்தின் வாயிலாக உண்டாகின்றன!

உள்ளத்தூய்மை பற்றி யோகசுவாமிகள் கூறுகையில் இறைவன் உள்ளத்தில் எழுந்திருக்க வேண்டுமானுல் அது தூய்மையாக இருக்க வேண்டும். குப்பை இருக்குமிடத்தில் இருக்க அருவருப்பாகவிருக்கும். கடவுளைக் காணவேண்டுமென்று முயற்சிக்க வேண்டாம். உன்னெழுக்கத்திற்கு கவனமாக இருப்பாயானுல் அதுவே போதும் என்கின்ருர்.

திருவாளர், தெணியான், த. கலாமணி, மா. கருணுநிதி க. சிதம்பரம்பிள்ளை, ந. நடராசா' அ. விஜயநாதன் முதலியோர் கலந்து கொண்டு பட்டி மன்றத்தைச் சிறப்பித்தனர். சைவப்புலவர் சி. வல்லிபுரம் விமர்சன உரை நிகழ்த்தினுர்.

---

# இந்திய...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இதுபற்றி இந்தமாதம் விரைவில் பொதுசபைகூடி ஒரு முடிவு எடுக்கவிருக்கின்றது.

இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளராக திரு. ஜே. ஆர் ஜயவர்தன நிற்கப்போகிருர். அவருக்கு எதிராக ஒரு பொது வேட்பாளரை எதிர்க்கட்சிகள் சார்பில் நியமிக்கும் முயற்சி இதுவரைக்கும் தோல்வியாக இருந்துவருகின்றது.

சமசமாசஜக்கட்சியின் சார்பில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா போட்டியிடவிருக்கிருர். கல்விகேள் விகளிலும் அரசியல் அனுபவத்திலும் இவர் தகுந்த வேட்பாளரே. கம்யூனிஸ் கட்சியும்நவசமாஜக் கட்சியும் இவருக்குஆதரவளிக்கும் என்று தெரிகின்றது

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிறிமாபிரிவினர் முன்னுள் அமைச்சர் திரு கொப்பேகடுவை நிறுத்துவதா சிறிமாவின் புதல்வர் அனுராவை நிறுத்துவதா என்பதில் இன்னமும் முடிவுகாணமுடியாமல் இருக்கின்றனர். திரு. மைத்திரிபாலவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் தாமே நிற்கப்போவதாக திரு மைத்திரிபால அறிவித்திருக்கிருர்.

ஜனுதிபதித்தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் தாமே முதன்முதல் வேட்பாளராக நிற்கப்போவதுபற்றி அறிவித்து அவர் பெருமைபட்டுக்கொள்கிருர்.

மக்கள் விடுதலை முன்னணி தமது தலைவர் திரு. ரோகண தஜயவீராவை நிறுத்தவிருப்பதாக அறிவித்துள்ளது. சிங்கள இளைஞர்கள் மத்தியில் கணிசமான ஆதரவைப் பெற்றுள்ள இக்கட்சியினர் தமிழ்ப் பிரதேசங்களிலும் தமது பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெறமுடியாதுபோனுலும்நாடு அடங்கிலும் தங்களுக்கு எந்தெந்தப் பகுதிகளில் ஆதரவு நிலவுகின்றது என்பதை கணக்கிட்டுக்கொள்ளவும் எதிர் காலத்தில் தமது நடவடிக்கைகளை அதற்கேற்ப அமைத்துக் கொள்ளவும் இது உதவும் என்று மக்கள் விடுதலை முன்னணி கருதக்கூடும்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் திரு. ஜி ஜி. [குமார்] பொன்னம்பலம் இன்றைய அரசமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை எடுத்துக் காட்டவும் தமிழ்மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தவும் இந்தத் தேர்தலை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கருதி வாக்களிக்கவேண்டும் என்று கருதுகின்ருர்.

தேர்தலைத் தமிழ் மக்கள் முழுதாகப் பகிஷ்கரிக்க வேண்டும் என்பது இன்னொரு பிரிவினரின் கோரிக்கையாகும்.

பொதுவாக பெரும்பான்மைத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலையையொட்டியே அவர்களின் முடிவும் அமையும் என்று கொள்வதில் தவறில்லை

இந்த நிலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது ஆதரவாளர்கள் ஜனுதிபதித் தேர்தலில் எப்படி நடந்து கொள்வது என்பதை அறிவிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றது.

இதில் இன்னும் தயக்கம் காட்டுவது தப்பபிப்பிராயங்கள் மேலும் வளர்ந்து கொண்டிருக்கவே வழி செய்யும்.

---

# வவுனியாவில் ஆதரவு தேடுவதில் தீவிரம்

[வவுனியா]

ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடும் திரு. குமார் பொன்னம்பலத்துக்கு வவுனியாவில் ஆதரவு தேடுவதில் தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வவுனியாகிளை தலைவர் திரு. சி. வேதாரணியம் பல கிராமிய தலைவர்களை சந்தித்து கலந்துரையாடி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடும் திரு. பொன்னம்பலத்துக்கு ஆதரவு திரட்டி வருகிருர்.

வவுனியா இ. தொ. கா. தலைவர் டாக்டர் எஸ். கே. பாலசிங்கத்தின் இல்லத்தில் இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றதாக தெரிகின்றது.

---

# விளையாட்டுவிழா

(வேலணை)

வேலணை மேற்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு இன்று நிலைய மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகளும் வெள்ளிவிழா ஞாபகார்த்த கேடயத்திற்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் நடைபெறவிருக்கின்றன. நிலையத்தலைவர் திரு. பொ. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் காவலூர் எம், பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்ருர்.

கிராமிய அபிவிருத்தி பற்றி ஆராய

# உலக வங்கி நிபுணர்கள் வவுனியா வருகின்றனர்

## கச்சேரியில் ஆலோசனை நடைபெறும்

[வவுனியா]

உலக வங்கி நிபுண்ர்கள் வவுனியா வருகின்றனர்.

உலகவங்கியின் உதவியுடன் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திதிட்டத்தின் கீழ் வவுனியா அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்காக உலக வங்கி நிபுணர் குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 7ம் திகதி வவுனிய வருகின்றனர்.

வவுனியா கச்சேரியில் அன்று ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன், பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. எம். சிற்றம்பலம், அபிவிருத்திசபை ஏனைய உறுப்பினர்கள், திட்டமிடல் பிரிவு உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வேலைநிறுத்தத்திலீடுபட்ட

## ஆசிரியர் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம்

[வேலணை]

1980 ஜுலைமாதத்தில் இடம்பெற்ற பொது வேலை நிறுத்தில் ஈடுபட்டு வேலை இழந்திருந்த தீவுப்பகுதியைச் சேர்ந்த பல ஆசிரியர்களுக்கு கடந்த ஜுலை மாதம் மீண்டும் யாழ். மாவட்டத்தில் வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்பொழுது இவர்கள் பண்டாரவளைக்கும் நுவரெலிய கல்விப்பகுதிக்கும் இடமாற்றப்படவிருக்கின்றனராம்

இவர்களில்திரு. கே. தவபாலன், திரு. பி. ஜே. அன்ரனி திரு. கே. சட்டநாதன், திரு. ரி. சண்முகநாதன், ஆகியோர்கள் பண்டாரவளை கல்வி மாவட்டத்திற்கும், திரு. சு. யோ. பூராசா, திரு. வி. கனகசபாபதி, திரு. எம். குமாரசாமி, திரு. வி. அற்புதரத்தினம், ஆகியோர் நுவரெலியா கல்வி மாவட்டத்திற்கும் இடமாற்றப்பட இருக்கின்றனராம்.

இவர்களின் விபரங்களை தங்களின் கவனத்திற்கு அறியத்தருமாறு பண்டாரவளை நுவரெலியா கல்விமாவட்ட அதிகாரிகள் வடமாகாண கல்வி அதிகாரியை கேட்டிருப்பதாக தெரியவருகின்றது.

சட்ட விரோதமாக

## மணல் ஏற்றிய 11 லொறிச் சாரதிகளுக்கு அபராதம்

[வேலணை]

சட்டவிரோதமாக மண்கும்பான், அல்லைப்பிட்டிப் பகுதிகளில் மணல்ஏற்றிய பதினேழு லொறிச்சாரதிகளுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தலா நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் மணல் ஏற்றப்படுவதற்கு அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் தடைவிதித்திருந்தும் சட்டவிரோதமாக சம்பந்தப்பட்ட லொறிச்சாரதிகள் மணல் ஏற்றியதற்காக ஊர்காவற்றுறைபொலிஸார் வழக்குத் தொடர்ந்திருந்தனர். (கி)

வேலணை

## நால்வர் மடத்தில் பெரியபுராண படனம்

(வேலணை)

வேலணை நால்வர்மடத்தடியில் திரு. வ. க செல்லப்பா தலைமையில் சித்தாந்தசாஸ்திர பெரியபுராண படன நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. இந்தத்தொடக்க விழாவிற்குப்பல இடங்களிலிருந்தும் பல பெரியார்கள் கலந்து கொண்டனர். (அ)

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(அரியாலை)

அறவழிப் போராட்டக் குழுவின் ஆதரவில் சாதிப்பிரச்னை சீதனப் பிரச்னை சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிறு காலை சுண்டிக்குளி சோமசுந்தரம் ஒழுங்கையிலுள்ளபேராசிரியர் திரு கு. நேசையா இல்லத்தில்நடைபெறுகிறது.

இக்கலந்துரையாடலில் இங்கிலாந்தைச் சேர்ந்வ திரு. சில்வியாபா ரும், பின்லாந்யத்ச்சேர்ந்த திரு சரிகுவைன ரும் விசேஷ விருந்தினராகக் கலந்து கொள்ளுகின்றனர். (அ)

## லண்டன் மேயருக்கு கொழும்பு மாநகரசபை வரவேற்பு

[கொழும்பு]

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள லண்டன் மாநகர முதல்வர் திரு. கிறிஸ்தோபர் லீவருக்கும், அவரது பாரியாருக்கும் கொழும்பு மாநகரசபை நேற்று முன்தினம் மாலை பொது வரவேற்பொன்றை அளித்துக் கௌரவித்தது.

இவ்வைபவம் கொழும்பு மாநகரசபை முதல்வர் திரு. சிறிசேன கூரே தலைமையில் நடைபெற்றது.

லண்டன் மாநகர முதல்வர் திரு. கிறிஸ்தோபர் லீவர் நேற்று பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசவை சந்தித்து உரையாடினர்.

இவருக்கு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று மதியபோசன விருந்தளித்துக் கௌரவித்தார்.

கண்டிக்கு இன்று விஜயம் செய்யவுள்ள லண்டன் மாநகர முதல்வருக்கு கண்டி மாநகரசபை பொது வரவேற்பு ஒன்றை அளிக்கவுள்ளது. [வெ]

## பிரசவ விடுதியில் மணிக்கூடு இல்லை

(வேலணை)

வேலணை அரசினர் பிரசவ மருத்துவமனையில் பிள்ளைகள் பிறக்கும்நேரத்தைக் குறித்துக் கொள்ளுதற்கு மணிக்கூடுகள் எதுவும் இல்லையாம்.

இங்குபிறக்கும் குழந்தைகளின் நேரத்தை அறிந்து கொள்வதற்கு உடனடியாக அங்குள்ள தனியார் நிலையங்களுக்குச் செல்லவேண்டியுள்ளதாக ஒரு பெற்றார் தெரிவித்தார். (அ)

## பரிபாலனசபை

[மட்டுவில்]

நுணுவில் விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ஆலய பரிபாலனசபையின் அங்குரார்ப்பணம் ஆலய தர்மகர்த்தாவும், மாவை ஆதீனத்தின் முதல்வருமான பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்காண்போர் சபையின் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்: திரு. த. செல்லத்துரை, உபதலைவர்: திரு. வ. குழந்தைவேலு, செயலாளர்: திரு எஸ். எம். அருளம்பலம், பொருளாளர்: திரு. க. தம்பிராஜா, உபபொருளாளர்: திரு. இ. இராஜநாயகம். (அ)

# ஈழத்துக் 'குயில்' ஒன்று தமிழகத்தில்பாடப்போகிறது

## இளையராஜா அழைக்கிறார்

இலங்கைத் தீவுக்கு ஓர் பாலம் அமைக்க விரும்பினான் பாரதி.

மகாகவி கண்ட அந்தக் கனவு முழு நிறைவுபெற்றதோ இல்லையோ, அவனது நூற்றாண்டை பரந்த அளவில் இந்தியாவிலும் இலங்கையிலும் கொண்டாடும் இந்த நேரத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழகத்துக்கும் ஈழத்துக்குமிடையே இலக்கியத்துறையில் மட்டுமின்றி கலைத்துறையிலும் மறுமலர்ச்சி தலைதூக்கிவருவது பாரதியையே கௌரவிப்பது போல இருக்கிறது.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் பலரது படைப்புக்கள் தமிழ் நாட்டில் இப்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் நல்ல நேரத்தில், நமது கலை



ஞர்களுக்கும் தமிழகம் இரு கரம் நீட்டுவது ஒரு நல்ல சகுனம்

ஒருசிலர் அங்கு கொடிகட்டிப் பறக்க, வேறு சிலருக்கு அழைப்புக்கள் வரத்தொடங்கியிருக்கின்றன.

நல்லூரைச் சேர்ந்த திருமதி சரோஜினி பொன்னுத்துரை, ஒரு மெல்லிசைக் கலைஞர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அடிக்கடி ஒலிக்கும் இவரது குரல், ஈழத்துத் தமிழ்ப்படத்திலும் இடம் பிடித்தது. இவரது குரல்வளம் கண்டு பெருமைப்பட்ட தமிழக முன்னணி இசை அமைப்பாளர்கள், இப்பொழுது சந்தர்ப்பம் அளிக்க முன்வந்திருப்பது நமக்குப் பெருமை தருகிறது!

திருமதி சரோஜினி பொன்னுத்துரையை நாம் சந்தித்தோம்.

தமிழ் நாட்டில் முடிகொண்டான் வெங்கட்ராமையாவிடம் முறையாக கர்நாடக சங்கீதம் பயின்ற இவருக்கு இசை என்றால் 'பைத்தியம்' என்று கூறலாம்! பதினைந்து ஆண்டுகளாக 'இசை நோயி'னால் இவர் பீடிக்கப்பட்டுவந்த போதிலும் இவரது முதல் பாடல் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் இசைத்தட்டில் பதிவானது. 1972ல் சரஸாவி ஸ்ருடியோவில் இவர் பாடிய ''கண்ணுக்குள் ஆடுது கலை வண்ணத் தேனீ'' என்ற பாடல் அது.

''சுமார்முப்பது பாடல்கள் பாடியிருக்கின்றேன். ஆனாலும் ஏழு எட்டுப் பாடல்கள் தான் 'ஹிற்'ஆகி இருக்கிறது. ''பொன் அந்தி மாலை நேரம் பொன் ஊஞ்சல் ஆடும் நேரம்...'' எனும் பாடல் வானொலி ரசிகர்களை மிகவும் கவர்ந்தது. ஈழத்து இரத்தினத்தின் ''சிந்திவரும் உந்தன் டன்னகையில் ஒரு கோடி எண்ணங்கள்'' தமிழ்த்தாசனின் ''சிட்டுக் குருவிகள் சொல்லும் கவிதைகள் துள்ளிடச் சொல்லும்...'' ஆகிய பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

''நெஞ்சுக்கு நீதி'' திரைப் படத்தில் ''என்னோடு கொண்டாடும் சொந்தங்களே...''

**சந்திப்பு: சாந்தா**

என்று பாடியிருக்கின்றேன்' கடைசியாக வெளிவந்த எனது பாடல்''நான் புதுமலரோ பனி மலரோ ரதிதேவி என் வடிவோ...''. ஈழத்து இரத்தினம் எழுதிய இப்பாடலுக்கு மோகன்ராஜ் இசை அமைத்துள்ளார்.'' என்று கூறுகிறார்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் வெளிவந்த தனது ''ஒருஜோடி ரோஜா விழிகள் அது பாடும் காதல் மொழிகள்...'' எனும் பாட்டை வானொலியில் போட்டுக் காட்டிவிட்டு ''இதற்கும் மோகன்ராஜ்தான் இசை அமைத்தார்கள்''என்று பெருமைப்பட்டார் திருமதி சரோஜினி.

''தமிழ் நாட்டிலிருந்து அழைப்பு எதுவும் வரவில்லையா?'' என்றோம்.

''இசை அமைப்பாளர் இளையராஜா இங்கு வந்த போது அவர் முன்பாக பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனது குரல் வளத்தைக்கண்டு திருப்தி அடைந்த அவர் ''தமிழ் நாட்டுக்குவந்தால் நீங்கள் நிச்சயம் பொப்பியுலர் ஆகிவிடுவீர்கள்''என்று கூறி அழைப்பு விடுத்திருந்தார். நான் அண்மையில் தமிழகம் சென்றிருந்தபோது மலேசியா வாசுதேவன் முன்பாக பாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. 'வொயிஸ்' கூட டெஸ்ட் செய்து 'ஓகே' ஆகிவிட்டது. என்ன செய்யலாம்அவசரஅலுவலாக இங்கு திரும்பவேண்டியிருந்ததால் ஆசை நிறைவேறவில்லை. ஆனாலும் காலம் கடந்துவிடவில்லை. மீண்டும் எனக்கு அழைப்பு கிடைத்திருக்கிறது. விரைவில் எனது நீண்டநாள் ஆசை நிறைவு பெறும். ஈழத்துக்கும் புகழ் வந்து சேரும்'' என்று வாய் நிறையக் கூறுகின்றார்.

''ஈழத்தில் நீங்கள் இன்னும் முன்னுக்குவர இடமுண்டு. சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லையா?'' என்று கேட்ட போது—

''எங்களது முன்னேற்றம் முழுவதுமே இசை அமைப்பாளர்கள் கையில்தான் இருக்கிறது. இன்று முன்னணியில் திகழும் மோகன்ராஜ் என்போன்ற கலைஞர்களுக்கு பெரும் ஊக்கவுமும ஒத்துழைப்பும் தருவதுடன் புதிது புதிதாக இசை அமைத்து

(5-ம் பக்கம் பார்க்க)

உங்கள் மங்களகரமான வைபவங்களில்
வீடியோ படப்பிடிப்புக்கு
சித்ராலயா ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்
போன்: 522

# கிராமம் தோறும் பனம் பழம் சேகரிப்பு!

## ப. பொ. அ. சபை துரிதம்

(யாழ்ப்பாணம்)

பனம்பழம் சேகரிக்கும் காலம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பனம்பழத்திலிருந்து ஜாம் மற்றும் குளிர் பானங்கள் போன்ற உபஉணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்கும் வேலைகளை பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பாகக் கிராமம் தோறும் பனம்பழம் கொள்வனவு செய்யும் பணியில் இச் சபை துரிதமாகச் செயல்பட்டு வருகிறது.

ஒரு முக்காளிப் பனம்பழம் 30 சதமாக இச்சபை கொள்வனவு செய்துவருகிறது.

இச்சபையின் தலைவர் திரு. க. நடராசா, உற்பத்தி உத்தியோகத்தர் திரு. எஸ் ஜெயராசா ஆகியோர் இதுதொடர்பான வேலைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளனர்.

(வண்-நிரு.)

## கன்பெரா மாநாட்டில் இலங்கை ஆய்வாளர்



நீர்வளச்சபையின் தலைமைப் பொறியியலாளரான திரு. சி. இராமநாதன் அவுஸ்திரேலியாவில் உள்ள கன்பெராவில் நடைபெற்ற சர்வதேச நிலநீர் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றுள்ளார். இவர் எழுதி அனுப்பிய "இலங்கையில் கற்பாறைப்பிரதேசங்களில் காணப்படும் சில நிலநீர் படுக்கைகளின் தன்மைகள்" என்னும் ஆராய்ச்சிக்கட்டுரையை, இந்த மாநாட்டை ஒழுங்குசெய்த அவுஸ்திரேலிய நீர்வளச்சபைஏற்றுக்கொண்டு தங்கள் சொந்த செலவிலேயே திரு இராமநாதனை சர்வதேச நிலநீர் அபிவிருத்தி நிபுணர்கள் பங்குபற்றும் இம்மகாநாட்டில் பங்குபற்றும்படி அழைப்பு விடுத்திருந்தது.

பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியாக 1968ம் ஆண்டு சித்தியடைந்த திரு. இராமநாதன் நீர்பாசனத் திணைக்களத்தில் பல பொறுப்பான பதவிகளைவகித்து நீர்பாசனத் துறையிலும் நிலநீர் ஆராய்ச்சித் துறையிலும் விசேட பயிற்சிகளைப் பெற்றதோடு இங்கிலாந்திலுள்ள பெர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் நிலநீர் பற்றிய முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். தற்போது நீர்வளச் சபையின் நிலநீர் அபிவிருத்தி பிரிவுக்குத் தலைமை தாங்கும் இவர் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பிரதானமாக வரட்சிப்பிரதேசங்களில் மக்களுக்குக் குடிநீர் தேவைக்கோ, விவசாயம் செய்வதற்கோ, தொழிற்சாலைகளின் தேவைக்கோ, நீர்வளங்களை விஷேசமாககுழாய் கிணறுகள் மூலம் பெற்றுக் கொடுப்பதற்குப் பொறுப்பாக இருந்திருக்கிறார். யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வளச் சபையின் மூலம் யாழ், மன்னார் மாவட்டங்களில் நடைபெறும் நிலநீர் பற்றிய ஆராய்ச்சி அபிவிருத்திவேலைகள் இவரது மேற்பார்வையின் கீழ்தான் நடைபெறுகின்றன.

சாவகச்சேரியைச் சேர்ந்த நொத்தாரிசு சின்னையா தம்பதிகளின் புதல்வரான இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர்.

## வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும் சங்கீதம் முதலாம், இரண்டாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

### மூன்றும் பகுதி யாழ்ப்பாணம்

#### இரண்டாம் பிரிவு

0 விஜயபவானி சந்திரசேகரம் பாட்டு, 0 கெலன் சரோஜினி தொம்மைக்குட்டி வயலின், அருள்மொழி கனகரட்ணம் பாட்டு, 0 யசோதா தர்மலிங்கம் வீணை, ஷகீனு ஈசா மொஹதீன் வீணை, 0 செல்வன் B. R. சமலநாதன் பாட்டு' 0 மீனக்குமாரி துரைராசா பாட்டு, 0 சாந்திக்குமாரி துரைராசா பாட்டு, சரஸ்வதி அம்பலவாணர் பாட்டு, 0 நாகராசா திருக்குமரன் பாட்டு, சிவகீதா சிவஞானம் பாட்டு, ஷெறீன்சுபோதினி சபாநாதன் (மே.பா) வீணை, மஞ்சுளு சண்முகநாதன் புல்லாங்குழல், 0 காயத்திரி தவஞானம்வீணை, 0 தர்சினி குருமூர்த்தி வயலின், 0 வரதப்பிரியா பரராஜசிங்கம் பாட்டு, வீணை, நளினி நவரட்ணம் பாட்டு, 0 அமுதா சோமசுந்தரம் பாட்டு, 0மாயித்திரி மனோகரன்பாட்டு. 0அமுதா இராமையா வயலின்

சாதாரண சித்தி

முத்துக்குமாரு இராதா கிருஷ்ணன் பாட்டு, இவோணி சகுந்தலா சவரிமுத்து பாட்டு, D மகாதேவா பாட்டு, சுகந்தினி சோமசுந்தரம் பாட்டு, உதயனி முத்துலிங்கம் பாட்டு,

நிரஞ்சனிமுத்துலிங்கம்பாட்டு. சாமினி முருகேஸ் பாட்டு, உருத்திரகுமாரி நாகராஜா பாட்டு, புனிதவதி இராமசாமி பாட்டு, சோமசுந்தரம் கிருஷ்ணகுமாரன் புல்லாங்குழல், யோகலதாஜினி யோககோபாலகிருஷ்ணன் வீணை, லா ஈசா கணேசன் (மே.பா) வயலின்.

ஜயந்தி விஜயலக்ஷ்மி சோமசேகரம் மே.பா) வீணை, வாசுகி தியாகராஜா பாட்டு, இரகுநாதமுதலியார் தில்லைக் கண்ணன் பாட்டு, பாலகுமாரி துரைராஜா பாட்டு, ஞானேஸ்வரி பாலச்சந்திரன் பாட்டு' வாசுகி தர்மரட்ணம் பாட்டு, சுகிர்தா மார்க்கண்டு பாட்டு, இரஞ்சிதமலர் விக்ரர் வீணை, உஷா பாலசுப்பிரமணியம் வீணை, சாந்தி சிவகுருநாதன் வீணை, பாலாம்பிகை திருநாவுக்கரசு (மே பா) வயலின், விஜிதா தியாகராஜா பாட்டு, வீணை, செல்லப்பா பாலேந்திரா புல்லாங்குழல், நிலானி சுந்தரலிங்கம் பாட்டு,சாந்தினி பொன்னம்பலம் பாட்டு புஷ்பலதா மார்க்கண்டு பாட்டு, புஷ்பசாந்தினி மார்க்கண்டு பாட்டு, சிவச்செல்வி செல்வச்சீராளன் பாட்டு, பிரேமசாந்தி முத்துக்குமாரசாமி பாட்டு, வீணை, தர்மசுந்தரி முத்துக்குமாரசாமி பாட்டு, திருத்தாம்பிகை மயில்வாகனம் பாட்டு, சிவரமணி சிவானந்தன் வீணை, ஸ்ரீஜெனனி நடராஜா.மே பா) வயலின், தர்மாஈஸ்வரி தெய்வேந்திரம் பாட்டு,தொம்மைக் குட்டி அன்ரன் சென் யூட் மே பா) பாட்டு, சசிகலா முத்தையா பாட்டு, ஜாநந்தி சதாசிவம் பாட்டு, சொர்ணவதி ஆறுமுகம் வீணை, சிவதர்சினி மார்க்கண்டு வீணை, 0 அருந்ததி பரஞ்சோதி பாட்டு. சந்தனநங்கை கனகரத்தினம் பாட்டு, மல்லிகா கனகசபை (மே.பா) வயலின், கொலஸ்ரிக்கா ஜேம்ஸ் பாட்டு. ஐயாத்துரை சிவச்சந்திரன் பாட்டு,

யசோதரபாரதி சோமசுந்தரபாரதி பாட்டு, வீணை வாதராணி சின்னராசா வயலின், குமுதினி கைலைநாதன் வயலின், ஜெகநாயகி இராமலிங்கம் பாட்டு, சிவஞானம் சிவகோணேசன் (மே. பா)வயலின், கல்யாணி தியாகராஜா வீணை, சேய்மணி திருஞானசம்பந்தன் பாட்டு, வீணை, கீதாஞ்சனு அம்ஸ தேவா பாட்டு, திலகா முருகமூர்த்தி பாட்டு.

### நல்லூர்

#### முதலாம் பிரிவு

0 விஜயலட்சுமி சிவராசா வீணை, 0 அமிர்தா சுந்தரலிங்கம் வீணை, 0 ஜெயந்திதேவி யோதீஸ்வரன் பாட்டு, 0 இரசிற்ரு சவுதினி இராசேந்திரம் பாட்டு, 0 குணநிதி சரவணமுத்து பாட்டு, நாகவல்லி பாக்கியராஜா (மே. பா.) வயலின், 0 ராதிகா சிவபதசுந்தரம் பாட்டு, 0 கற்பகம் அரியரத்தினம் பாட்டு. 0 முத்துக்கிருஷ்ணன் கிருஷ்ணமுரளி பாட்டு, f வரதலக்ஷ்மி பாலசுப்பிரமணியம் வீணை.

#### இரண்டாம் பிரிவு

கார்த்திகா பத்பநாதன் பாட்டு, ருச்கினி சுந்தரலிங்கம் பாட்டு. சிவலோகநாயகி தியாகராசா பாட்டு, 0 திருமகள்மகேசன் பாட்டு, 0 சூரியகுமாரி இரத்தினசபாபதி பாட்டு, வீணை, நளாயினி P.R. வீணை.

யசிந்தா நாகலிங்கம் பாட்டு 0 பாலேந்திரராணி ஆறுமுகம் பாட்டு, 0 ரோகினி சண்முகராஜா பாட்டு, செல்வன் தே. லோகநாதன் பாட்டு, சுப்பிரமணியம் பத்மலோஜினி பாட்டு, மாலினி மகாலிங்கம் பாட்டு, 0 இராசரத்தினம் ஜனர்த்தனன் பாட்டு.

#### சாதாரணசித்தி

யோகமணி செல்வராசா (மே. பா.) வீணை, கேதீஸ்வரி செல்வராசா (மே. பா.) வீணை ஜானகி வன்னியசிங்கம் வீணை, றேணிகா கௌதமி செபரட்ணம் வீணை, சுகன்யா பத்மநாதன் வீணை, கௌரி சந்தையா பாட்டு, சசிகலா சண்முகராசா பாட்டு, வாசுகி விக்னராசா வயலின், தியாகேசபிள்ளை அன்பன் புல்லாங்குழல், நிர்மலாதேவி கார்த்திகேசு பாட்டு, கீதாராணி குணராஜா வீணை, தமயந்தி நித்தியானந்தம் பாட்டு, ஷெனிக்கா அன்ரனற் சந்திரசேகரா பாட்டு, வானதி துரைசாமி பாட்டு, கணபதிப்பிள்ளை தவநேசன் பாட்டு, நாகபூஷணி வைதேகி இராஜாபிள்ளை பாட்டு, ஜெயந்தி குமாரசாமி பாட்டு, ஷகீலா மயில்வாகனம் பாட்டு, கீதா மயில்வாகனம் பாட்டு, நளாயினி நல்லநாதன் பாட்டு, ஜனதா நாகலிங்கம் பாட்டு, சத்தியபாமா முத்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

## கும்பாபிஷேகம்

பண்டத்தரிப்பு)

நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகையா ஆலய ஸ்ரீவள்ளி தேவசேனு சமேத சுப்பிரமணிய சுவாமி பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் எதிர்வரும் 6ம் திகதி திங்கட்கிழமை யன்று நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் கடந்த ஜுலை மாதம் தொடக்கம் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(அ)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

121 வது வெற்றித் திருநாளாக
மனோகரா (யாழ்ப்பாணம்) 8-9-82 வரை
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

DAILY 5 SHOWS
றீகல் (யாழ். நகர்)
JIM BROWN, JIM KELLY IN
Three The Hardway

சாந்தி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
MARTIN SHEEN, SAM WATERSTON
"EAGLES WING"
(SCOP — COLOR)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சிவாஜி- மஞ்சுளா
எங்கள்தங்கராஜா

ராணி (யாழ். நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்பன் கலர்]

3-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ஐந்து இளைஞர்களும், ஐவகை ஆயினும் ஆருயிர் நண்பர்கள் ஒவ்வொருவருடைய தனி வாழ்க்கையும் ஒருவகைப் பாலைவனம். இவர்களின் வாழ்வில் அழகும் இளமையும் எளிமையும், தூய்மையும் பரந்தநோக்குமுடைய பெண்ணொருத்தி வருகிருள். ஐவருக்கும் அவளில் ஒரு கண். அவளோ ஐவரிலும் ஒரு வகையான அன்பையே வைத்திருந்தாள். முடிவை அறியவெண் திரை விடையளிக்கும்.
பாலைவனச்சோலை
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்



இலங்கை – இந்திய கூட்டுத் தயாரிப்பில் உருவாகி ஒரே முறையில் இலங்கையிலும் இந்தியாவிலும் திரையிடப்படும் குடும்பக் காவியம். இளம் சிட்டுக்கள் பிரதாப் ராதிகா சேர்ந்து நடிக்கும் வண்ணக் காதல் காவியம். இலங்கையின் எழில் காட்சிகள் டத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு.
பிரதாப்-ராதிகா விஸவநாத்
டெல்லி கணேஷ் மற்றும் பலர்
நடிக்கும்
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

# சேவை, தகைமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கவேண்டும்

## இ. ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களாக தொழில் செய்பவர்களின் தொகை ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ள போதும் இவர்களின் சேவைக் காலத்தில் பதவி உயர்வு கிடைப்பவர்கள் மிகமிக அரிதாகி வருகிறது. சேவை அடிப்படையில் தகமை அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக அரசியல் செல்வாக்கிற்காக பதவி உயர்வுகள் வழங்குவது ஆசிரியர்களின் சேவையை அவமதிப்பதான விவகாரமாகும். தேர்தலின் பிற்பாடு வழங்கப்பட்ட சில பதவி உயர்வுகள் இதற்கு ஆதாரமாக உள்ளன.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரை சந்தித்து ஆசிரியர்களின் குறைபாடுகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்திய மேற்படி உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இச்சங்கத்தின் பிரதி நிதிகளுக்கும், அமைச்சின் மேலதிக செயலாளருக்கும் நடந்த இப் பேச்சுவார்த்தையில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எம். பி. சி. டி. சில்வாவுடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் எச். என். பெர்ணந்து உபதலைவர் ஏ. ஜெயசேகரா அமைப்புச் செயலாளர் ஐ. ஜயசிங்க, துணைச்செயலாளர் டி. எஸ். த சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பட்டதாரிகளான ஆசிரியர்கள் அனைவருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படவேண்டும் என்று இக்குழுவினர் வற்புறுத்தினர்.

இது விடயமாக தாம் திறைசேரிக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேற்சொல்லிய பதவி உயர்வு சம்பந்தமான குற்றச்சாட்டுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்றும் இது விடயங்கள் மேல்மட்ட உத்தரவுப்படியே தாம் செய்வதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் வேலை செய்ய விரும்பும் ஆசிரியர்களுக்கும் உரிய வகையில் லீவு வழங்கப்படவேண்டும் என்றும் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஆசிரியர்களுக்கும் அனுமதி வழங்கவேண்டும் என்றும், பிரதேச அலுவலகங்களில் ஆசிரியர்களின் பணிகளில் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தமது ஆசனங்களில் அதிகமாக இல்லாததினால் இவர்களைச் சந்திப்பதற்கு ஆசிரியர்கள் லீவு போட்டுவிட்டு அலைய வேண்டிய நிலை இருக்கிறது. இது மட்டுமல்ல லஞ்ச விசாரணைக்குட்படுத்த வேண்டிய உத்தியோகத்தர்களும் கல்வி இலாகாவின் பிராந்திய அலுவலகங்களில் பணியாற்றுவது இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படக் காரணமாகவுள்ளன என்றும் இதுபோன்ற மற்றும் பல்வேறு பிரச்னைகள் பற்றியும் இச்சங்க குழுவினர் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

[வண். நிரு—மா]

# இப்படியும் நடக்கிறது

நீண்ட காலத்துக்குப் பின்னர் வெளிநாட்டிலிருந்து ஊர்திரும்பிய நண்பர் ஒருவர் நேற்று முன்தினம் என்னைச் சந்தித்தார்.

யாழ். நகரில் கால்வைத்த முதல்நாள் தமக்கு ஏற்பட்ட 'அனுபவத்தை' அவர் தெரிவித்த போது...... அழவும் முடியவில்லை; சிரிக்கவும் முடியவில்லை.

அவர் என்னிடம் கேட்டார்—

''யாழ்ப்பாணத்தில் என்ன... புதிதாக பல தியேட்டர்கள் முளைத்துவிட்டன. படங்களும் பல மாதிரிப் பெயர்களில் இருக்கின்றன...''

சில நிமிடங்களுக்குள்ளாகவே நிலைமையைப் புரிந்து கொண்டு நான் சொன்னேன்;

''புதிதாக தியேட்டர்களும் முளைக்கவில்லை; படங்களும் வரவில்லை. ஆள் அளவிலான 'போஸ்டர்'களில் காணப்படுவது மூலைக்குமூலை இப்பொழுது தோன்றிவிட்ட 'ரீயூஷன்' சென்ரர்களும், அங்கு படிப்பிக்கும் பிரபல ஆசிரியர்களின்பெயர்களும்தான்''

நான் கூறியதை நம்புவதற்கு நண்பருக்கு அதிக நேரம் பிடித்தது என்றால் நம்புவீர்கள்தானே?

'ஊரான்'

## தமிழ் இனத்தின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்ப்பம் மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வரையில்; திறமைக்கு மதிப்பளியாது தரப்படுத்தலில் உயர் கல்வி தங்கி இருக்கும் வரையில்; அரசாங்க வேலைவாய்ப்புகளும் நியமனங்களும் துண்டு முறை மூலமும் அரசியல் அரவணைப்பு மூலமும் இருக்கும் வரையிலும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் இந்நாட்டைத் தங்கள் நாடாகக் கொள்வதைத் தடுக்கப்படும் வரையிலும்; தமிழ் இளைஞர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு வேட்டையாடப் படும் வரையிலும்; வேறு எந்த அபேட்சகரும் தமிழ் இனத்தின் வாக்கைக் கோருவதற்கோ அல்லது பெறுவதற்கோ அருகதை அற்றவர்களாகிறார்கள்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் காங்கிரஸ் கீழ்க்கண்ட விடயங்களை இந்நாட்டுக்கும் உலகுக்கும் எடுத்துக் காட்ட விரும்புகிறது.

1. இந்த நாட்டிலே தமிழ்த் தேசிய இனம் வாழ்கிறது.

2. தமிழ்த் தேசிய இனம் தனித்துவமுடையது.

3. தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்னைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை,

4. மாற்ற முடியாத அதன் சுயநிர்ணய உரிமை என்ற உண்மை எந்த ஒருவருடைய அங்கீகாரத்திலும் தங்கியிருக்கவில்லை.

5. தமிழ்ப் பேசும் இனத்தின் அபிலாஷை விடுதலையே.

தன்மானமுள்ள தமிழ் இனத்தின் சார்பில் மேற்கூறிய உண்மைகளை இந் நாட்டுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டுவதற்கு தமிழ் காங்கிரஸ் போட்டியிடுகிறது.

## இன்று சித்த ஆயுர் வைத்தியர்கள் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

சித்தஆயுர்வேத அபிவிருத்தி சம்பந்தமான சித்த ஆயுர்வேத வைத்தியர்களின் மகாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். லங்கா ஆயுர்வேதக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மகாநாட்டில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கமும் கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரமும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

பல முக்கிய தீர்மானங்கள் இம்மகாநாட்டில் நிறைவேற்றப்படும். (அ)

## இன்றைய இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி இசைப்பகுதி நடாத்தும் 3-வது ஆண்டு பத்துநாள் இசைவிழாவின் இறுதி நாளாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

மாலை 6 — 7 மணி

செல்வி மேனகா பூபாலன் நட்டுவாங்கத்தில் ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி நடன மாணவிகளின் நடனம்.

மாலை 7 — 8 மணி

திரு. எ. திலகேஸ்வரன் பாட்டு, திரு. வி. கெ. குமாரசாமி வயலின் திரு. எம். சிதம்பரநாதன் மிருதங்கம், திரு. எஸ். கே. கணேசலிங்கம் கெஞ்சிரா.

இரவு 8 — 9 மணி

செல்வி ராஜலட்சுமி கனகசபாபதி பாட்டு, செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் வயலின், திரு. எ. எஸ். இராமநாதன் மிருதங்கம் செல்வன் ஆர் ராஜீ கடம்.

இரவு 9 மணி — வில்லிசை

சங்கீத பிதாமகர் புரந்தரதாசர் என்னும் பொருளில் கலைவாணர் இசைக்குழுவினரால் நடாத்தப்படும். [உ]

## ஜனாதிபதிதேர்தல்: வவுனியாவில் நடவடிக்கைகள்

[வவுனியா]

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்கஇருக்கும் அரசாங்க ஊழியர்களை அத்தாட்சிப்படுத்தும் அரச உயர் அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்பு வவுனியா கச்சேரியில் நடைபெற்றது.

இப் பயிற்சி வகுப்புக்கு வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் தலைமை வகித்தார்.

நெடுங்கேணி, செட்டிகுளம் வ. தெ. த. பி, வ. தெ. சி. பி. உதவி அரசாங்க அதிபர்களும் கலந்துகொண்டனர்.

தபால்மூலம் வாக்களிக்க இருக்கும் அரசாங்க ஊழியர்கள் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் இப் பயிற்சி வகுப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது [அ]

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி விவசாயிகள் தின விழாவை முன்னிட்டு மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் நடைபெறவுள்ளது.

நீர்வேலி விவசாயிகளினால் நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் கமநலசேவை நிலையத் தலைவர் திரு. எஸ். வி. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இச் சவாரிப் போட்டியில், கமநல சேவைகள் இலாகா உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

கோப்பாய் எம். பி. திரு. ஆ மு. ஆலாலசுந்தரம், உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்டிணர், புத்தூர் கமநல சேவை தலைவர் திரு. ரி. எம். யோசேப் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். [மா]

## வட இலங்கை ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாரு பாட்டு, விஜயலட்சுமி குமாரசாமி சர்மா பாட்டு, சிவாஜினி பீதாம்பரசிங்கம் பாட்டு, சண்முகம் நந்தரூபன் பாட்டு.

ராதிகா காராளசிங்கம் (மே. பா.) வீணை, தாட்சாயணி சந்திரசேகரக்குருக்கள் பாட்டு, பிரதீபா காராளசிங்கம் பாட்டு சசிகலா இராசையா பாட்டு, வாசுகி குணராஜா பாட்டு, (A சாந்தி குமாரசாமி பாட்டு.

[தொடரும்]

## தாக்குதல்

பாக்தாத் செப் 4

வளைகுடாவுக்குள் பிரவேசித்த இனம்தெரியாத நான்கு கப்பல்களை ஈராக்கியப்படைகள் பீரங்கிகள் மூலம் தாக்கிச் செயலிழக்கச் செய்துள்ளன.

இவற்றுள் இரண்டு எண்ணெய்த்தாங்கிக் கப்பல்களும் அடங்கியிருந்தன. இக்கப்பல்கள் எந்தநாட்டைச் சேர்ந்தவை என்று அறிவிக்கப்படவில்லை. (வெ)

## இளம் பெண் எரிகாயங்களுக்கு பலி

[யாழ்ப்பாணம்)

இளம்பெண் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

முள்ளியவளையைச் சேர்ந்த கலாதேவி அருள்பிரகாசம் (22 வயது] என்பவரே எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். இவர் நான்குபிள்ளைகளின் தாயாவார்.

இவரது உடம்பில் எரிந்து கொண்டிருந்த தீயை அணைக்கச்சென்ற கணவன் அருள்பிரகாசம் எரிகாயங்களுக்குள்ளாகி முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மா]

## கிரிக்கட் போட்டி

[யாழ்ப்பாணம்]

நொதேர்ண் ஸ்போர்ட்ஸ் நடாத்தும் மென்பந்து கிரிக்கட் போட்டிகள் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் ஆரம்பமாகின்றது.

## கணவன் தாக்கி மனைவி ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகராட்சி மன்றத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவரின்மனைவி தலைகாயங்களுடன் நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

குருநகரைச்சேர்ந்த திருமதி புஷ்பம் செபஸ்தியன் (44 வயது) என்பவரே அடிகாயங்களுக்கு இலக்காகி நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பொலிசாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் தமது கணவர் தம்மை தலையிலும் கையிலும் தாக்கியதாக தெரிவித்துள்ளார்.


# ஹோட்டல் பரடைஸ்

இன்றையதினம் தனது பத்தாண்டு நிறைவை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது...

**அனைவருக்கும் இதயம்கனிந்த நன்றிகள்!**

சுவைமிகு கோழிப்புரியாணி, நூடில்ஸ், வட்டிலப்பம் அத்துடன் கிறேப்யூஸ், இன்னும் பல்வேறு பண்டங்களுடன்; தொடர்ந்தும் எமது பணி சிறப்புற அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரது ஆசியையும் வேண்டிநிற்கும் ஸ்தாபனம்;

# ஹோட்டல் பரடைஸ்

91, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.

போன்: 7131.

4429


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 66-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் செப். 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.